REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 மே 14 சனிக்கிழமை

# தினகரன்


THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 112 | Saturday 14, May, 2022 | 12பக்கங்கள்


தற்போதைய நிலை குறித்து ஆராய

## ஜனாதிபதி-அரச எம்.பிக்கள் இன்று விசேட சந்திப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இன்றைய

06

## அவசியமான தருணத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க புதிய பிரதமர் தயார்

### நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே இலக்கு எனவும் தெரிவிப்பு–

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றில் தமக்கு பெரும்பான்மை பலம் உள்ளதாக தெரிவித்துள்ள புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, அவசியமான தருணத்தில் அதனை நிரூபிக்கத் தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பிரதமராக நேற்றுமுன்தினம் பதவியேற்றதன் பின்னர் கொள்ளுப்பிட்டி வாலுகாராம விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேநேரம், காலிமுகத்திடல் போராட்டத்திற்கு பொலிஸாரால் இடையூறு ஏற்படுத்தப்பட மாட்டாது என புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது உறுதியளித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அடுத்துவரும் மாதங்களில் இதைவிட நிலைமை மோசமாகும்.

06



## பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை கூடுவதில் எந்த மாற்றமும் இல்லை

### திட்டமிட்டபடி கூடும் என்கிறார் சபாநாயகர்

பாராளுமன்றம் கடந்த 6ஆம் திகதி இறுதியாக கூடி நிறைவடையும்போது, எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

அதன் பிரகாரம் எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதில் எந்த மாற்றமும் இல்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார். சபாநாயகர் ஊடக பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

06



## ரணிலுடன் இணைந்து பணியாற்ற USA விருப்பம்

### தூதுவர் ஜூலிசுங் டுவிட்டரில் பதிவு

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் வாழ்த்து தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க சிறப்பாக செயற்படுவார் என எதிர்பார்ப்பதாகவும்

06



### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின்

# புதிய அமைச்சரவை விரைவில்! 20 அமைச்சர்களுக்கே இடம்

### பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னர் அமைச்சரவையை நியமிக்கும் வகையில் அமைச்சர்களது சத்திய பிரமாணத்துக்கும் ஏற்பாடு

### பிரதியமைச்சர்கள் சிலர்; இராஜாங்க அமைச்சர்கள் இல்லை?

லோரன்ஸ் செல்வநாயகம்

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை 20 அமைச்சர்களுக்கு மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட 20 அமைச்சர்களைக் கொண்டதாக புதிய அமைச்சரவை அமையும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கு மேலதிகமாக அதிகளவு எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்ட அமைச்சுக்களுக்கு மாத்திரம் பிரதியமைச்சர்களை

06



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, நேற்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தித்து வாழ்த்து தெரிவித்தார். அனைத்து மக்களினதும் நல்வாழ்வை நோக்கிய ஜனநாயக செயன்முறை ஊடான இலங்கையின் பொருளாதார மீட்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்காக இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்குமென அவர் தெரிவித்தார்.



## பொருளாதார நெருக்கடிகளை பிரதமர் ரணில் வெற்றிகொள்வார்

03

புதிய பிரதமருக்கு EPDP டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று (13) பிரதமர் அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

அரசியல் மாற்றங்களை சாதகமாக பயன்படுத்த

## எந்தவொரு தமிழ் கட்சியும் வங்குரோத்து நிலையிலில்லை

### TNA தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியும் வங்குரோத்து நிலைக்குச் செல்லவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



சர்வதேச ஊடகவியலாளர் ஒருவருக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையில் அரசியல் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ் அரசியல் கட்சிகள் சேற்றில் மீன்பிடித்து கட்சி அரசியலில்

06



## அடுத்தகட்ட அரசியல் தீர்மானம் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்பே

03

SLPP பொதுச்செயலாளர் சாகர காரியவசம் அறிவிப்பு

## எம்.பி ஒருவருக்கு ஆறு பொலிஸார் பாதுகாப்பு

### IGP அதிரடி நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு ஆறு பொலிஸ் உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு பாதுகாப்பு

06

## புதிய பிரதமருக்கு மனோ MP வாழ்த்து

### TPA தலைவர் மனோ அறிக்கை



"ரணில் விக்கிரமசிங்க தனிநபராக சபைக்கு வந்தார். இப்போது பிரதமர். எதிர்வரும் தினங்களில், அவர் ஆட்சியமைத்து, கபினட் அமைத்தால், அவருக்கு 113+ கிடைக்கலாம். அப்போது அவர் தனிநபர் அல்ல. ஆகவே அவர் ஆளட்டும். அவருக்கு எமது பண்பான வாழ்த்துகள்..!" என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்

06

## வன்முறை செயற்பாடுகளை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள்

### பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களுக்கு அறிவித்தல்

ஸாதிக் ஷிஹான்

நாட்டில் எந்தவொரு பகுதியிலும் வன்முறைச் செயற்பாடுகள் இடம்பெற்றால் அது தொடர்பில் தகவல் தெரிவிக்க புதிய தொலைபேசி இலக்கங்களை பாதுகாப்பு அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

பல்வேறு தரப்பினரால் பொது அல்லது தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், தீ வைத்தல், சொத்துக்கள்

06

## SJBயில் எவருமே அமைச்சு பதவிகளை ஏற்க மாட்டார்கள்

### கட்சியின் பொதுச்செயலாளர் நேற்று அறிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்தில் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் ஏற்க மாட்டார்கள் என கட்சியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று (13) தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை

06

## தமிழகத்திலிருந்து நிவாரண பொருட்கள் 16இல் வருகிறது

### முதற்கட்டமாக அரிசி மற்றும் மருந்து வகைகள்

திருச்சி ஷாஹுல் ஹமீட்

இலங்கைக்கு தமிழகத்திலிருந்து எதிர்வரும் 16ஆம் திகதி அரிசி மற்றும் மருந்து வகைகள் அனுப்பப்படவுள்ளன. தற்போது இவை பொதி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள்

06



GCE (O/L) பரீட்சை 23இல்!

## தனியார் வகுப்புக்களுக்கு 17ஆம் திகதி முதல் தடை



இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையுடன் தொடர்புடைய தனியார் வகுப்புக்களை நடத்த எதிர்வரும் 17 ஆம் திகதி நள்ளிரவுடன் தடை விதிக்கப்பட்டுள்ளது.

06

## இலங்கையருக்கு வீசா வழங்கும் செயற்பாடு நிறுத்தப்படவில்லை

### இந்திய தூதரகம் அறிவிப்பு

இலங்கையருக்கு இந்தியாவுக்கான வீசா வழங்குவது நிறுத்தப்படவில்லையென இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள உயர் ஸ்தானிகராலயம் இது தொடர்பில் நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது உயர் ஸ்தானிகராலயம் அல்லது இலங்கையிலுள்ள இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயங்கள் விசா வழங்குவதை

06

## நீண்ட நாட்களின் பின் டொலரின் விலை குறைவு

### சுமார் 15 ரூபாவால் நேற்று சரிவு



இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை குறைந்துள்ளது. அதன்படி, இலங்கையில் பல உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்று 365 ரூபாயாக பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் டொலரின் விலை 380 ரூபாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக

06

## புதிய பிரதமருக்கு இந்தியா வாழ்த்து

### இணைந்து பணியாற்ற விருப்பம்



இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற ஆர்வமாக உள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பதவியேற்றதையடுத்து இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது.

08

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமய வழிபாட்டின் பின் கடமையேற்பு














ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் புதிய பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க பின்னர் ஆசிர்வாதம் பெற்றுக் கொள்வதற்காக கங்கார விஹாரைக்கு சென்றார். அங்கு நடைபெற்ற சமய நிகழ்வுகளிலும் கலந்த கொண்டார். நேற்று பிரதமர் தனது அலுவலகத்தில் கடமைகளை பெறுப்பேற்றுக் கொண்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்.

படங்கள் ஹிந்த குணதிலக்க

IMF மற்றும் நட்பு நாடுகளின் உதவியுடன்

# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை


### பாராளுமன்றத்தில் பெரும்பான்மையும் நிரூபிக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நட்பு நாடுகளின் உதவி ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தனியே தீர்வு காண முடியாது என்பதை சுட்டிக்காட்டிய புதிய பிரதமர், பாராளுமன்றத்தில் அனைத்து கட்சிகளுடனும் கலந்துரையாடி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

புதிய பிரதமராக சத்தியபிரமாணம் செய்து கொண்டதையடுத்து கொள்ளுப்பிட்டி வாலுக்காராம விகாரையில் பௌத்த மத தலைவர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாராளுமன்றத்தில் எமக்கு பெரும்பான்மை பலம் உள்ளது தேவைப்படும்போது அதனை நிரூபிக்கவும் தயார்.

அடுத்து வரும் மாதங்களில் நாட்டில் நெருக்கடி நிலை தற்போதைய நிலைமையை விட மோசமாகவே இருக்கும் அந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் இதனை எம்மால் தனித்து மேற்கொள்ள முடியாது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

அதற்கிணங்க புதிய பிரதமருக்கு அமெரிக்க மற்றும் இந்தியத் தூதுவர்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதுடன் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

காலிமுகத்திடலில் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க:

காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்படும் போராட்டத்தில் கை வைக்கப் போவதில்லை என்றும் அவர்களுக்கு எந்த இடையூறுகளும் ஏற்படுத்தப்பட மாட்டாது என தெரிவித்துள்ள அவர், அந்தப் போராட்டம் அவ்வாறே நடக்கட்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ஸ)

# அரசின் சிறந்த செயற்பாடுகளுக்கு த.தே.கூட்டமைப்பு ஒத்துழைக்கும்

### அமைச்சுப் பதவியை ஏற்கப் போவதில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே புதிய அரசாங்கத்தின் சிறந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை, புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகள் எதனையும் பொறுப்பேற்கப் போவதில்லை என்றும் அந்த கட்சியின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச,வாசுதேவ நாணயக்கார,உதய கம்மன்பில ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தும் 10 கட்சிகளின் கூட்டணியானது புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என தீர்மானித்துள்ளதாகவும் அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி 10 கட்சிகளின் கூட்டணி விசேட கலந்துரையாடல்களை மேற்கொண்டு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார். (ஸ)

# பொருளாதார நெருக்கடிகளை பிரதமர் ரணில் வெற்றிகொள்வார்

### புதிய பிரதமருக்கு EPDP டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து



பொருளாதார நெருக்கடிகளிலிருந்து இலங்கை மக்களை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க முன்வந்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மைகளை உருவாக்கக் கூடிய பிரதமரின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளார்.

ஆறாவது தடவையாகவும் நாட்டின் பிரதமராக பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்ற அனுபவமும் சர்வதேச உறவுகளும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளை இலகுபடுத்துமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை பேசிக் கொண்டிருக்காமல்,ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உருவாகவுள்ள புதிய அரசாங்கத்துக்கு ஏனைய தமிழ் தரப்புக்கள் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமெனவும் டக்ளஸ் தேவானந்தா எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வெசாக் தினத்தில் மின்வெட்டு இல்லை



வெசாக் பௌர்ணமி தினத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அதன் தலைவர் இவ்விடயத்தை தெரிவித்தார். இதன்படி நாளை 15ம் திகதி வெசாக் பௌர்ணமி தினத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்தகட்ட அரசியல் தீர்மானம் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்பே

### SLPP பொதுச்செயலாளர் சாகர காரியவசம் அறிவிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்தக்கட்ட அரசியல் தீர்மானம் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பலவீனமடைவதற்கு அரசாங்கத்தின் ஒரு தரப்பினரது முறையற்ற செயற்பாடுகள் பிரதான காரணியாக அமைந்தது என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் ஏற்பட்ட வெறுப்பு, கட்சியின் அடுத்தக்கட்ட நடவடிக்கை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பலவீனமடைவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகித்த 11பங்காளி கட்சிகள் மூலகாரணியாக அமைந்துள்ளன.

அரசாங்கத்தில் இருந்துக்கொண்டு அரச செயற்பாடுகளை விமர்சித்து மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்தார்கள். காலி முகத்திடல் அமைதிவழி போராட்ட களத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இச்சம்பவத்தை தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகிறதை அவதானிக்க முடிகிறது.

06

# அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க செயற்றிட்டம்

### தனித்தனி பொறுப்புகளுடன் விசேடகுழுவை நியமித்தார் பிரதமர் ரணில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டை விரைவாக நிவர்த்தி செய்யவும் மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவும் யோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு மருந்து மற்றும் உரத் தட்டுப்பாடு தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி நிலவும் சிக்கல்களை தீர்க்கும் வகையில் யோசனைகளை பெற்றுக்கொள்ளும் பொறுப்பு அந்த குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசிய பொருட்களைத் தட்டுப்பாடின்றி மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக அதனுடன் தொடர்பு பட்ட துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தி யோசனைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளதுடன் உரத்தட்டுப்பாடு தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகில விராஜ் காரியவசம் பிரதமரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக அதற்கான பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு மூலம் சம்பந்தப்பட்ட துறையின் அனைத்து தரப்பினரையும் சந்தித்து நிலவும் உண்மையான சிக்கல்களை இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்களின் யோசனைகளையும் பெற்றுக்கொண்டு பிரதமருக்கு அது தொடர்பில் அறிக்கைகளை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஸ)

இலங்கைக்கு நிவாரண பொருட்களை அனுப்பும் பணி

# தமிழ் நாட்டு அரசால் நான்கு அதிகாரிகள் குழு நியமனம்

இலங்கைக்கு நிவாரண பொருட்களை அனுப்பும் பணிக்கு 4 அதிகாரிகள் கொண்ட குழுவை அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு தமிழக அரசின் சார்பில் அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப இந்திய மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

இதன்படி, 80 கோடி ரூபா மதிப்பிலான 40,000 தொன் அரிசி, 28 கோடி ரூபா மதிப்பிலான 137 மருந்து பொருட்கள், 15 கோடி ரூபா மதிப்பில் குழந்தைகளுக்கு வழங்க 500 தொன் பால்மா ஆகியவற்றை இலங்கை மக்களுக்கு தமிழக அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சென்னை, தூத்துக்குடி துறைமுகங்களில் இருந்து பொருட்களை அனுப்பி வைக்க குறித்த குழுவினர் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும், இந்த மாதம் இறுதிக்குள் பொருட்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இலங்கைக்கு வழங்குவதற்காக அதிக விலைக்கு 40,000 மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்முதல் செய்ய ஒப்புதல் அளித்த அரசாணைக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்து உத்தரவிட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் அரிசி 33 ரூபா 50 சதம் என்ற அடிப்படையில் 40,000 மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்முதல் செய்ய 134 கோடி ரூபாவை ஒதுக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய உணவுக் கழகம் ஒரு கிலோகிராம் அரிசியை 20 ரூபா என்ற விலையில் விற்பனை செய்து வருகிறது. எனவே, இந்திய உணவுக் கழகத்திடமிருந்து அரிசியைக் கொள்முதல் செய்யும் பட்சத்தில் 54 கோடி ரூபாவை மீதப்படுத்த முடியும்.

இதுதொடர்பாக சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பிய போது, இந்திய உணவுக் கழகத்தின் அரிசி தரமற்றது எனவும், அரிசியைக் கொள்முதல் செய்வது தொடர்பான தகவல்களை பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது தமிழக அரசு தரப்பில் முன்னிலையான தலைமை வழக்கறிஞர், மத்திய அரசின் அனுமதியுடன்தான் அரிசி அனுப்பப்படுவதாக தெரிவித்துள்ளார். அத்துடன், அவசர

06

## மீண்டும் இயல்பு நிலைக்கு கொழும்பு பங்குச் சந்தை



கொழும்பு பங்குச் சந்தை நேற்று முதல் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்புகிறது.

அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் 343.79 புள்ளிகளாலும், S&P SL 20 139.56 புள்ளிகளாலும் அதிகரித்துள்ளது. இது 5.52% வளர்ச்சியாகும். அத்துடன், நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் சுமார் 2.18 பில்லியன் வர்த்தகம் நடைபெற்றுள்ளது.

மாஸ்டர் சிவலிங்கத்துக்கு

# பொழும்புத் தமிழ்ச்சங்கம் அனுதாபம் தெரிவிப்பு

மறைந்த கலைஞர் மாஸ்டர் சிவலிங்கத்துக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது இரங்கலை தெரிவித்துள்ளது.

அச்சங்கம் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரைநூற்றாண்டுக்கு மேலாக, நம்நாட்டுச் சிறுவர்களின் அன்புக்குரியவராக விளங்கிய மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் கவலையுற்றோம். இரண்டு மூன்று தலைமுறைகளாக அவரது அற்புதமான கதை சொல்லும் பாணியினால் கவரப்பட்டு, இலங்கை மக்கள் அவரை மதித்தும் நேசித்தும் வந்தமை நாம் அறிந்ததே. சிறுவர்கள் கதை கேட்டு, அதன்மூலம் வாசிப்பை நோக்கி ஈர்க்கப்படுவதற்கும், தமிழின் சுவையை எளிமையான முறையில்

06

# பிரதமர் ரணிலுக்கு SLPP பூரண ஆதரவு

### மஹிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி?




ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்க கட்சியின் உயர் பீடம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கும் யோசனையை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்க பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிற்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை வழங்க பொதுஜன பெரமுன கட்சி மட்டத்தில் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரணிலின் அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை ஏற்கமாட்டோம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவும் அமைச்சுப் பதவிகளை ஏற்கவும் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை தெரிவித்தார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 251.46 | 267.85 |
| கனடியன் டொலர் | 279.08 | 291.91 |
| யூரோ | 385.89 | 401.40 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 448.89 | 468.16 |
| சுவிஸ் பிராங்க் | 365.24 | 379.01 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்றின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.83 |
| குவைத் டினார் | 1,188.53 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 31ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 12

## குறள் தரும் சிந்தனை



பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு

*காலம் உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுதல், அந்த நற்செயலின் வெற்றியை நழுவவிடாமல் கட்டிப்பிணிக்கும் கயிறாக அமையும்.*

# புதிய பிரதமர் ரணிலின் நியமனமும், மக்களின் நம்பிக்கை எதிர்பார்ப்புகளும்

இலங்கையில் கொவிட் பெருந்தொற்றைத் தொடர்ந்து உருவெடுத்த பொருளாதார வீழ்ச்சி காரணமாக தோற்றம் பெற்ற அரசியல் நெருக்கடிக்கு மத்தியில், நாட்டின் புதிய பிரதமராக நேற்றுமுன்தினம் பதவியேற்றிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பிரதமராகப் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ அரசியல் நெருக்கடிகள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தனது பதவியை துறந்ததையடுத்து இலங்கை அரசியலில் ஓரிரு நாட்களாகப் பெரும் பரபரப்பு நிலவி வந்தது. புதிய பிரதமராகப் பதவியேற்கப் போவது யாரென்பது குறித்து அரசியல் களத்தில் எதுவுமே புரியாத நிலையில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

எக்கட்சியைச் சேர்ந்தவர் பிரதமர் பதவியை ஏற்கப் போகின்றார்? அப்பதவியை ஏற்கப் போகின்றவர் யார்? புதிய அமைச்சரவையில் அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் இடம்பெறப் போகின்றார்களா அல்லது கூட்டுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கப் போகின்றார்களா? புதிய பிரதமராகப் போகின்றவருக்கு மக்களின் அங்கீகாரம் இருக்கப் போகின்றதா? புதிய பிரதமராக நியமிக்கப்படுபவரை தற்போது போராட்டம் நடத்துகின்றவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

இவ்வாறெல்லாம் பலவிதமான விடை புரியாத வினாக்கள் கடந்த சில தினங்களாக மக்கள் மத்தியில் பரபரப்பாக நிலவி வந்தன. சுருங்கக் கூறுவதாயின் இலங்கையின் தற்போதைய அரசியல் களநிலைவரமானது அடுத்த நிமிடத்தில் எவ்வாறு மாற்றமடையப் போகின்றதென்பதே எவருக்கும் புரியாமலிருந்தது. அரசியல் களத்தில் உள்ள அரசியல்வாதிகளால் கூட இதனை ஊகிக்க முடியாதிருந்தது.

இவ்வாறான நிலையிலேயே புதிய பிரதமராக நேற்றுமுன்தினம் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார் ரணில் விக்கிரமசிங்க. நாட்டின் அரசியல் களத்தில் சமீப தினங்களாக நிலவி வந்த பரபரப்பையும், எதிர்பார்ப்புகளையும் தற்காலிகமாக தணிக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் நியமனம் அமைந்திருக்கின்றது என்பதுதான் உண்மை. ஆனாலும் அவரது பிரதமர் நியமனத்துடன் நாட்டில் அரசியல் பதற்றம் ஓய்ந்து விடுமா என்பதை இப்போதைக்கு அறுதியிட்டுக் கூற முடியாதிருக்கின்றது.

அரசியல் பதற்றம் முற்றாகத் தணிய வேண்டுமானால் அதற்கான சூழல் தொலைவிலேயே உள்ளதாகத் தெரிகின்றது. அரசியல் நெருக்கடி தொடருவதற்கான அறிகுறிகளே தற்போதும் தென்படுகின்றன. ஆனாலும் தற்போதைய அரசியல் நெருக்கடியானது விரைவில் முடிவுக்கு வந்து, நாட்டில் மீண்டும் சுமுக நிலைமை தோன்ற வேண்டுமென்பதே மக்களின் ஆதங்கம் ஆகும்.

ஆனாலும் இன்று எமது நாட்டுக்குத் தேவையாக உள்ளது வெறுமனே அரசியல் மாத்திரமல்ல. வீழ்ச்சியடைந்து போயுள்ள பொருளாதாரத்தை துரித கதியில் மீளக்கட்டியெழுப்புவதற்கான செயல்திட்டங்களே மிகவும் அவசியமாகவுள்ளன. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலையேற்றம், எரிபொருட்களுக்கான நீண்ட கியூ வரிசை போன்றனவெல்லாம் விரைவில் முடிவுக்கு வந்து தாங்கள் நெருக்கடியற்று நிம்மதியாக வாழும் சூழல் உருவாக வேண்டுமென்பதே சாதாரண மக்களின் ஏக்கம் ஆகும்.

புதிய பிரதமர் நியமனத்துடன் நாட்டில் துரித பொருளாதார முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் உருவாக வேண்டுமென்பதுதான் மக்கள் உள்ளத்தில் உள்ள பிரதான ஆதங்கமாக உள்ளது. இன்று எமது நாட்டுக்கு அரசியலுக்கு அப்பால் துரிதமான பொருளாதார அபிவிருத்தியே மிக அவசியமாக இருக்கின்றது. இன்றைய வீழ்ச்சியில் இருந்து எமது நாடு எவ்வாறாவது உடனடியாக மீண்டெழ வேண்டும். இல்லையேல் மக்களின் இன்றைய நெருக்கடிகள் மேலும் தீவிரமடைவதற்கான ஆபத்தே தென்படுகின்றது. மக்கள் இதனை விட மேலும் நெருக்கடியைத் தாங்கிக் கொள்வதென்பது இயலாத காரியமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மிகுந்த புரிந்துணர்வுடனும் நல்லிணக்கப்பாட்டுடனும் செயற்பட்டு இன்றைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை முதலில் மீட்டெடுக்க வேண்டுமென்பதுதான் மக்களின் இன்றைய எதிர்பார்ப்பு ஆகும். அதற்கான ஆற்றலும் நம்பிக்கையும் இரு தலைவர்களுக்கும் உண்டென்று மக்கள் நம்புகின்றனர்.

ஆசிய பிராந்திய நாடுகளைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்க மிகுந்த அனுபவமும், ஆற்றலும் வாய்ந்த அரசியல் தலைவர்களில் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார். எமது அயல்தேசமான இந்தியாவுடனும், மேற்குலகுடனும் மிகுந்த நெருக்கமும் நட்புறவும் கொண்ட அரசியல் தலைவர் அவரென்பது வெளிப்படையான உண்மை. பிரதமராக அவர் பதவியேற்றிருப்பதால் இலங்கையின் பொருளாதார நெருக்கடியை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சர்வதேசம் பெருமளவில் உதவிகள் புரியுமென்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

எது எவ்வாறாயினும், எமது நாட்டில் நிலவிய அரசியல் சர்ச்சைக்கான தற்காலிக முற்றுப்புள்ளியாகவாவது இன்றைய மாற்றத்தைக் கருதிக் கொண்டு நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்டெடுப்பதில் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டியதே அவசியமாகும். அரசியல் நெருக்கடியென்பதே மென்மேலும் தொடருமானால் நாடு எதிர்காலத்தில் மீண்டெழ முடியாத வீழ்ச்சிக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

editor.tkn@lakehouse.lk

## ஐ.தி. சம்பந்தன் வாழ்வும் பணிகளும்;

# மொழிவழித் தொழிற்சங்கங்களை உயிர்ப்பிக்க ஒலித்த குரல் ஓய்ந்தது!

பிறக்கின்ற ஒவ்வொரு உயிருக்கும் மரணம் நிச்சயமானதுதான். இம்மாதம் 03 ஆம் திகதி லண்டனில் தமது 87 வயதில் இயற்கை எய்தியிருக்கும் மூத்த தொழிற்சங்கவாதியும், தமிழ் உணர்வாளரும், சமூகச் செயற்பாட்டாளரும், எழுத்தாளரும், ஆவணப் பதிவாளருமான ஐ.தி. சம்பந்தன் அவர்களின் மறைவு தமிழுலகில் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவர் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி முன்னாள் மானிப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் வி. தருமலிங்கம் மற்றும் ஆலாலசுந்தரம் ஆகியோருடன் ஒன்றாக மரணமடையும் ஆபத்தில் இருந்து தப்பிக் கொண்டவராவார்.

அவர்களுடன், இவரையும் கொலை செய்வதற்கென வந்த தமிழ் இளைஞர்களிடமிருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பியவர். அக்காலப் பகுதியில் அத்தகைய கொலைகளைச் செய்பவர்களை இனந்தெரியாதவர்கள் என்றுதான் பத்திரிகை ஊடகங்கள் பதிவு செய்தன.

ஐ.தி. சம்பந்தன் அவர்கள், தான் ஆழமாக நேசித்த இலங்கைத் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அனைத்து அவலங்களையும், அவர் நெருங்கிப் பழகிய பல தமிழ்த் தலைவர்களின் மரணங்களையும் பார்த்து விட்டே இம்மாதம் நிரந்தரமாக கண்ணயர்ந்து விட்டார்.

காரைநகர் பூமியில் 26.06.1935 ஆம் திகதி மத்திய தர குடும்பத்தில் பிறந்த சம்பந்தன் அவர்கள், தமது இளமைக்காலம் முதலே தமிழர் உரிமை சார்ந்து இயங்கிய சமூகப் போராளி.

அவரை கொழும்பில் துறைமுக அதிகார சபையில் பணியாற்றிய எழுத்தாளரும், நாவலர் சபை, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆகியனவற்றில் முக்கிய பொறுப்புகளிலிருந்த (அமரர்) சோமகாந்தனை சந்திக்கச் செல்லும் சந்தர்ப்பங்களில் பார்த்து பேசியிருக்கின்றேன்.


வருடத்தில் வரும் செப்டெம்பர் மாதங்களை தன்னால் மறக்க முடியாது என்றும், அத்தகைய ஒரு மாதத்தில் 1985 ஆம் ஆண்டு, தான் எவ்வாறு உயிர் தப்பினேன் என்பதை விரிவாக ஒரு நேர்காணலில் தெரிவித்துள்ளார்.


சம்பந்தன், இலங்கைத் தமிழ் மக்கள் சார்ந்து ஆவணப்படுத்தல் பணிகளிலும் ஆக்கபூர்வமாக உழைத்திருப்பவர். அவர் எழுதிய நூல்கள் அதற்குச் சிறந்த சான்று.

1985 இல் அவர் உயிர்தப்பியிருந்தாலும், அதற்கு முன்பே 1958 இல் கொழும்பில் நடந்த கலவரத்தின் போதும் எவ்வாறு தெய்வாதீனமாக உயிர் தப்பினார் என்ற கதையையும் 2009 இல் எழுதி வெளியிட்ட Black July 83 : Indictment கறுப்பு யூலை 83 : குற்றச்சாட்டு என்ற ஆங்கில – தமிழ் நூலிலும் விரிவாக பதிவு செய்துள்ளார்.

இந்த நூல் இலங்கை அரசியல் வரலாற்றை படிக்க விரும்பும் மாணவர்களுக்கும், அரசியல் விமர்சகர்களுக்கும் உசாத்துணையாகவும் விளங்குகிறது.

தான் எழுதும் ஆவணங்களில் அவர் முக்கியமான அரிய ஒளிப்படங்களையும் தவறாமல் பதிவேற்றி ஆதாரம் காண்பிப்பதிலும் அக்கறை கொண்டிருந்தவர். அத்தகைய ஆவண ஏடுகளுக்காக அவர் செலவிட்ட நேரம் அதிகம். இதுவிடயத்தில் அவர் அயராத உழைப்பாளியாகவே திகழ்ந்தார்.




2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி காலை, கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கு வணங்கச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்ட தமது ஊரைச் சேர்ந்தவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தியாகராசா மகேஸ்வரன் அவர்களைப் பற்றியும் சம்பந்தன் ஒரு விரிவான நூலை எழுதியிருக்கிறார்.

மொழிவழி தொழிற்சங்களின் தேவையை தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கும் சம்பந்தன், இதுதொடர்பாக விரிவான பேட்டியையும் வழங்கியிருந்தார்.

1985 ஆம் ஆண்டிற்குப்பின்னர் செயல் இழந்து விட்ட தமிழ் தொழிற்சங்க கூட்டணிக்கு மீண்டும் புத்துயிர்ப்பு வழங்க வேண்டும் என்பதும் சம்பந்தனின் வேண்டுகோளாகவிருந்தது.



தன்னால் இயன்றவரையில் இலங்கைத் தமிழ் இனத்திற்காக பல்வேறு வழிகளில் குரல் கொடுத்துவந்த ஐ. தி. சம்பந்தன், இம்மாதம் 03 ஆம் திகதியுடன் பேசுவதையும் எழுதுவதையும் நிறுத்திக் கொண்டார். அன்னாருக்கு எமது இதய அஞ்சலி.

லெ.முருகபூபதி...
(எழுத்தாளர், ஊடகவியலாளர்)
அவுஸ்திரேலியா

# வளர்ச்சிப் பாதையில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் புதிய பரிணாமத்துடன் அபரிமித வளர்ச்சி கண்டு வருகின்றது என்றால் அதனை யாரும் மறுக்காது ஏற்றுக் கொள்வர். பொதுமக்கள் நலனை இலக்காகக் கொண்ட திணைக்களத்தின் அண்மைக்கால பணிகள் பாராட்டத்தக்கவையாக உள்ளன.

இலங்கை நிர்வாக சேவை (முதலாந் தரம்) சிரேஷ்ட உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.அஸ்மி, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும், பதிவாளராகவும் கடமை பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பொதுமக்களுக்கான பணிகள் மற்றும் சேவைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தில் பொதுமக்களுக்கு அதிகம் நன்மை பயக்கும் மொத்தம் 16 கோப் பிறஸ் (Coop fresh) பல்பொருள் விற்பனை நிலையங்கள் இதுவரை திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் 12 கோப்பிறஸ் விற்பனை நிலையங்கள் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய கோப் பிறஸ் விற்பனை நிலையங்கள் உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருட்களை பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி, நியாய விலையில் விற்பனை செய்து வருகின்றன. பொருட்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தி, கொள்ளை இலாபமீட்டும் தற்காலத்தில் கோப் பிறஸ் பல்பொருள் விற்பனை நிலையங்களின் உதயமானது பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று, காரைதீவு, நிந்தவூர், சாய்ந்தமருது, அம்பாறை, உகண, தெஹியத்தக்கண்டி பிரதேசங்களும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மட்டக்களப்பு, ஏறாவூர், ஓட்டமாவடி, ஈச்சந்தீவு கன்னங்குடா பிரதேசங்களும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள திருகோணமலை, கந்தளாய், கிண்ணியா, மூதூர், பதவிசிறிபுர பிரதேசங்களும் நன்மையடைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 45 கூட்டுறவுச் சங்கங்கள் தொழிற்பட்டு வருகின்றன. இவற்றில் 25 சங்கங்களினால் சுமார் 27 எரிபொருள் விற்பனை நிலையங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையங்கள் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நேரங்களில் இரவு, பகல் பாராது பொதுமக்களுக்கு சேவை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் நெருக்கடிகளின்றி, மிக இலகுவாக எரிபொருளை பெற்றுக் கொண்டமை கடந்தகால வரலாறாகும். அது மாத்திரமன்றி, சுமார் எட்டு எரிபொருள் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தும் வேலைத்திட்டமும் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக கிண்ணியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'ஒசுசல' மூலம் பொதுமக்களுக்கு சேவை வழங்கி வருகின்றது.

நாட்டின் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு நல்கும் வகையிலும், எதிர்காலத்தில் உணவுத்தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் நோக்கிலும் கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி, பால், உபஉணவு உற்பத்திகளில் ஈடுபடவுள்ளமை இனிப்பான செய்தியாகும். இதற்கான விரிவான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார். இவ்வேலைத்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதிய மரக்கறி விற்பனை நிலையம் (Fresh Vegetable Centre) விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன், இப்பணிக்கு பிரதேசத்திலுள்ள உற்பத்திச் சங்கங்கள், மகாசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் என்பன நிறைவான ஒத்துழைப்பு நல்கவுள்ளன. சுமார் 05 ஏக்கர் காணியும் இதற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று, திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் பிரதேசத்தில் தெங்கு உபஉணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பசுமை வேலைத்திட்டம் ( Green Garden Project) நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மக்களை நோக்கிய அபிவிருத்திப் பணிகளுக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், பிரதம செயலாளர் துசித பீ வணிகசிங்க, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முதுபண்டா ஆகியோர் நிறைவான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





அத்துடன், கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டுவுச் சங்கங்களின் இயக்குனர் சபைகளும் உத்வேகத்துடன் பணியாற்றி வருகின்றமை நினைவு கூரத்தக்கது. மாகாணத்திலுள்ள 45 கூட்டுறவுச் சங்கங்கள் புதிய உற்பத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளும் ஆணையாளரினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# சமூகத்தை விழிப்பூட்டும் கதாப்பிரசங்கங்கள் ஆலயங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும்

ஒவ்வொரு ஆலயத்திற்கும் சென்று முன்னெடுக்கும் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகளை மனதார பாராட்டுகின்றேன். அது போல் சமூகத்தை விழிப்பூட்டக் கூடிய சமய கதாப்பிரசங்கங்களையும் ஒவ்வொரு ஆலயத்திலும் முன்னெடுத்துச் செல்லுங்கள் எனும் பணிவான வேண்டுகோளையும் முன்வைக்கின்றேன் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கோளாவில் ஸ்ரீ அறுத்தநாக்கொட்டீஸ்வரர் கூட்டுப் பிரார்த்தனை சபையின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

சபையின் தலைவர் பெ.சண்முகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் பிரதம அதிதிகளின் ஒருவராக கலந்து கொண்டதுடன், அருளாளராக சபையின் ஆலோசகரும் கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய பிரதமகுருவுமான சிவஸ்ரீ சீ.கு.கௌரிசங்கர் குருக்கள்,

கோளாவில் ஸ்ரீ கண்ணகிஅம்மன் ஆலய கப்புகனார் பூபாலபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். விசேட அதிதிகளாக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா, கலாசார உத்தியோகத்தர் நிசாந்தினி தேவராஜ், பிரதேச ஊடகவியலாளர் வி.சுகிர்தகுமார், ஆலய தலைவர் நா.ஏரம்பமூர்த்தி, கிராம உத்தியோகத்தர் இ. சுமணாரதி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ட. சாமினி, ஓய்வுநிலை அதிபரும் சபையின் முன்னாள் தலைவருமான பெ.தணிகாசலம், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் க.கண்ணதாசன், ஆலையடிவேம்பு வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெகநாதன், நான்கு குடி வண்ணக்குமார், கூட்டுப் பிரார்த்தனை சபை உறுப்பினர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வருகை தந்த அதிதிகள் கூட்டுப் பிரார்த்தனை சபையினரால் வரவேற்கப்பட்டனர். பின்னர் மங்கள விளக்கேற்றலும் இறைவழிபாடும் தமிழ் மொழி வாழ்த்துப்பாவும் பாடப்பட்டன. இதன் பின்னர் வரவேற்புரையினை சபையின் உதவிச் செயலாளர் வே.சிவபாக்கியம் வழங்க தலைமையுரையினை செயலாளர் சௌ.மிதுர்ஷன் ஆற்றினார்.

தொடர்ந்து அதிதிகளினது உரை இடம்பெற்றதுடன் அனைவரும் கூட்டுப்பிரார்த்தனை சபையின் இறைபணி தொடர்பில் பாராட்டி பேசினர். இச்சபையினை முறையாக வழிநடத்த பல்வேறு உதவிகளை வழங்குவதாகவும் அவர்கள் உறுதி அளித்தனர்.

இதேநேரம் நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசுப்பொதிகளும் கோளாவில் கலைவாணி கல்லூரியின் முகாமையாளர் டிலோஜனின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டன. இதன் போது சபையின் தலைவர் சேவையை பாராட்டி கலாசார உத்தியோகத்தர் நிசாந்தினி தேவராஜினால் அப்பர் சுவாமிகளின் உருவப்படம் வழங்கி வைக்கப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்தது. இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய தவராசா கலையரசன் எம்.பி, "இந்த நாட்டிலே பாரம்பரியமாக வாழ்கின்ற எமது இனத்திற்குரிய அந்தஸ்து இதுவரை கிடைக்கவில்லை. ஆலயங்களின் வரலாறுகள் அழிக்கப்படுகின்றன. இதுவே இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது" எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், "இன்று பிள்ளைகள் பல்வேறு சமூக சீர்கேடான, சட்டத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் இதுபோன்ற கூட்டுப் பிரார்த்தனை சபைகளின் இறைசேவை அளப்பரியது. இதன் மூலம் சமூகத்தை ஒழுக்கமுள்ள சமூகமாக மாற்ற முடியும். பெற்றோர் தமது பிள்ளைகளை சரியான வழியில் கொண்டு செல்லவும் இச்சபை உதவுகின்றது. இச்சபையினை வழிநடத்த முடிந்த உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும்" எனக் கூறினார்.





இதேநேரம் கடந்த தேர்தலில் திட்டமிடப்பட்டு தேர்தல் களத்தில் சில நபர்கள் இறக்கப்பட்டனர். அதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்யப்பட்டது. ஆயினும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை அம்பாறை மாவட்ட மக்கள் மீது கொண்ட பற்று காரணமாக தேசியப் பட்டியல் உறுப்புரிமையை வழங்கி மாவட்ட மக்களை காப்பாற்றியது. அதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு நன்றி சொல்கின்றேன். ஆனாலும் இந்த வரலாற்று தவறை எதிர்காலத்தில் விடாமல் ஒன்றாக பயணித்து தமிழர்கள் உரிமையை பாதுகாப்பது இங்கு வாழும் மக்களின் கடமை" எனத் தெரிவித்தார்.

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

# சவால்களை முறியடித்து வெற்றிப் பயணம் மேற்கொள்ளும் ஆற்றல்மிகு தலைவர் ரணில்

**தனது அரசியல் வாழ்வில் தடைக்கற்களையெல்லாம் படிக்கற்களாக மாற்றி, சவால்களை முறியடித்து சோதனையைக் கூட சாதனையாக மாற்றியமைக்கும் அரசியல் வல்லமை பெற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க, ஆறாவது தடவையாக பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.**

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகி, இரு நாட்கள் கடந்திருந்தும் புதிய பிரதமரின் கீழ் ஆட்சி அமையவில்லை. இந்நிலைமை நீடித்திருந்தால் இலங்கையின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும் நிலைமை உருவெடுக்கும். சர்வதேச உதவிகளும் தடைப்படக் கூடும்.

பிரதமர் பதவியை ஏற்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் சஜித் பிரேமதாசவுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்பதற்கு, 'ஜனாதிபதி பதவி விலக வேண்டும்' என்ற நிபந்தனை சஜித் தரப்பில் இருந்து விடுக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பிரதமர் பதவியை ஏற்குமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 19 ஆவது திருத்தத்தை மீள செயற்படுத்தும் நிபந்தனையுடன் நாட்டின் நிலைமை கருதி, பதவியை ஏற்பதற்கு ரணில் சம்மதம் தெரிவித்திருந்தார்.

## அரசியலில் ரணில் விக்கிரமசிங்க கடந்து வந்த நீண்ட பாதை (1970–2022)





ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கை ஏற்கனவே இலங்கை அரசியலில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. அவர் தற்போது இலங்கை அரசியலில் அதிமுக்கிய பாத்திரமாக மாறியிருக்கின்றார்.

1949 மார்ச் 24 அன்று எஸ்மண்ட் விக்கிரமசிங்க தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் ரணில். தாயார் மாலினி விக்கிரமசிங்க. மூன்று சகோதரர்கள், ஒரு சகோதரி. ரணில் இரண்டாவது மகன் ஆவார்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையும் பயின்றவர் அவர்.

ஐ.தே.கவின் இளைஞர் முன்னணி ஊடாக அரசியல் பயணத்தை அவர் ஆரம்பித்தார். 1970 இல் களனி தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1977 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பியகம தொகுதியில் போட்டியிட்டு 22 ,045 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். 28 ஆவது வயதில் பிரதி வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெற்றார்.

1977 ஒக்டோர் 05 ஆம் திகதி இளைஞர் விவகார மற்றும் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1980 பெப்ரவரி 14 அன்று கல்வி அமைச்சரானார். 9 ஆண்டுகள் அப்பதவியில் நீடித்த அவர், கல்வித்துறையில் நவீன யுகத்துக்கேற்ப பல மறுசீரமைப்புகளை மேற்கொண்டார். 1993 மே 17 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றார். 1994 இல் ஐ.தே.க. தலைவராக அவர் நியமனம் பெற்றார். கட்சியிலிருந்து வெளியேறி மீண்டும் கட்சிக்குத் திரும்பிய காமினி திஸாநாயக்க பிரதான எதிர்க்கட்சித் தலைவரானார்.காமினி திஸாநாயக்க கொல்லப்பட்ட பின்னர் எதிர்க்கட்சி தலைவராகவும் ரணில் செயற்பட்டார். 1995 ஆம் ஆண்டில் களனிப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியையான மைத்திரி விக்கிரமசிங்கவை கரம்பிடித்தார்.

1999 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க முதன்முறையாக போட்டியிட்டார். அத்தேர்தலில் சந்திரிகாவே வெற்றி பெற்றார். ரணிலுக்கு 42.71% வாக்குகள் கிடைத்தன.

2000 ஒக்டோபர் 10 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி வெற்றி பெற்றது. ஓராண்டுக்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் 2001 டிசம்பர் 05 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

2001 டிசம்பர் 09 ஆம் திகதி ரணில் பிரதமரானார். 2004 ஏப்ரல் 2 ஆம் திகதிவரை பதவியில் நீடித்தார். ஆனால் நாடாளுமன்றத்தில் ஆயுட்காலம் முடிவடைவதற்குள்ளேயே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்தார். 2004 ஏப்ரல் 2 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. ஐ.தே.க. ஆட்சி கவிழ்ந்தது. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 3 இலட்சத்து 29 ஆயிரத்து 524 விருப்பு வாக்குகளைப் பெற்றார்.

2005 நவம்பர் 17ம் திகதி நடைபெற்ற ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிட்டார். 47 இலட்சத்து 6 ஆயிரத்து 366 வாக்குகளைப் பெற்றார். இத்தேர்தலில் மஹிந்தவே வெற்றி பெற்றார்.

2010 ஜனவரி 26 ஆம் திகதி ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷ களமிறங்கினார். அவருக்கு எதிராக எதிரக்கட்சிகளின் சார்பில் இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா களமிறக்கப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் களமிறங்கவில்லை என்பதுடன், யானை சின்னத்துக்கு பதிலாக அன்னப்பறவை சின்னமே முன்னிலைப் படுத்தப்பட்டது. இத்தேர்தலில் மஹிந்தவே வெற்றி பெற்றார்

2010 ஏப்ரல் 4 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் யானை சின்னத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டது. ஆனாலும் தேர்தலில் தோல்வியடைந்தது. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 2 இலட்சத்து 32 ஆயிரத்து 957 வாக்குகளைப் பெற்றார். 2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் விட்டுக்கொடுப்புகளை செய்ய வேண்டியநிலை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டது. மஹிந்த அரசிலிருந்து வெளியேறிய சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பொதுவேட்பாளராக களமிறங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

## இலங்கை அரசியல் வரலாற்றில் ஐ.தே.க தற்போது படைத்திருப்பது புதிய சாதனை!

மைத்திரி ஜனாதிபதி, ரணில் பிரதமர் என்ற தொனியிலேயே பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன. 62 இலட்சத்து 17 ஆயிரத்து 162 வாக்குகளைப் பெற்று மைத்திரி வெற்றி பெற்றார். மஹிந்த தோல்வியுற்றார்.

2015 ஜனவரி 9 ஆம் திகதி பிரதமராக ரணில் பதவியேற்றார். 2015 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப்பெரும்பான்மை இல்லாவிட்டாலும் தேசிய அரசமைத்து ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 5 இலட்சத்து 566 வாக்குகளைப் பெற்று மீண்டும் வரலாற்று வெற்றியை பதிவு செய்தார்.

2018 ஒக்டோபர் மாதம் மஹிந்த ராஜபக்ஷவை, ஜனாதிபதி மைத்திரி பிரதமராக்கினார். எனினும், நீதிமன்றத்தை நாடி சவால்களையெல்லாம் சமாளித்து மீண்டும் பிரதமரானார் ரணில். நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் மண்கவ்வச் செய்தார்.

2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறியாகவே இருந்தார். எனினும், கட்சிக்குள் எதிர்ப்புகள் வலுத்ததாலும், பங்காளிகள் விடாப்பிடியாக நின்றதாலும், நாட்டு மக்கள் சஜித்தை கோரியதாலும் மூன்றாவது முறையும் தியாகம் செய்ய வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

எனினும், 1994 ஆம் ஆண்டுக்கு பிறகு ஐக்கிய தேசியக் கட்சியை சார்ந்த உறுப்பினர் ஒருவரை வேட்பாளராக களமிறக்கும் வாய்ப்பு உதயமானது. 2019 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தது. அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்தது. சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உயதமானது.

2020 பொதுத்தேர்தலில் இரு அணிகளும் தனியாகப் போட்டியிட்டன. ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடு முழுவதும் 2.15% வாக்குகளே கிடைக்கப் பெற்றன. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்புக் கிடைத்தது.

நாடாளுமன்ற அரசியலுக்கு வந்த பிறகு ரணில் எந்தவொரு பொதுத்தேர்தலிலும் தோற்றதில்லை. 42 வருடங்களாக தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து சாதனையும் படைத்துள்ளார். 2020 இல் தோல்வியைத் தழுவினார். எனினும், தேசியப்பட்டில் ஊடாக சபைக்கு நாடாளுமன்றம் வந்தார்.

42 ஆசனங்களை வைத்துக் கொண்டு ஆட்சியைப் பிடித்ததுடன், அரசியலமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தினார். தற்போது ஒரு ஆசனத்தை வைத்துக் கொண்டு பிரதமராகியுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாக பிளவுபடும் அறிகுறிகள் தென்படுகின்றன. அரசியல் பயணத்தைப் பொறுத்தவரை ரணில் வெற்றி நாயகன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

**ராகவன்...**

# இலங்கையின் அரசியலில் தவிர்க்க முடியாத தலைமைத்துவ ஆளுமை!

**இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்திருக்கின்ற நிலையில் பாராளுமன்றத்தில் மிகுந்த அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க 6 ஆவது பிரதமராக பதவியேற்றுள்ளார். அவரின் பதவிப் பிரமாணம் தொடர்பாக ஆதரவாகவும் எதிராகவும் விமர்சனங்கள் இல்லாமலில்லை.**

அரசியலில் தூரநோக்கு சிந்தனை கொண்ட ரணில் விக்கிரமசிங்க, 2001 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அரச திறைசேரியின் இருப்பு குறைந்து நாடு இக்கட்டான நிலையிலிருந்த தருணத்தில் பிரமதராக பதவி வகித்து சவால்களை வெற்றி கொண்ட அனுபவமிக்கவர்.

கடந்த காலத்தில் ஐந்து தடவைகள் பிரதமர் பதவி வகித்துள்ளார். 20 வருடங்களுக்கு மேலாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்தவர். 17 வருடங்கள் அமைச்சுப் பதவி, 43 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினர் பதவி, 28 வருடங்களாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவி ஆகியவற்றை வகித்து சாதனைகளுக்கு சொந்தக்காரர்.

1993ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதசவின் மறைவின் பின்னர் டி.பி. விஜயதுங்க இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அப்போது அமைச்சரவையில் அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, 1993 ஆம் ஆண்டு மே மாதம் ஏழாம் திகதி புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார்.

44 வயதில் இலங்கையின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டவர். இலங்கை அரசியல் வரலாற்றில் ரணில் விக்கிரமசிங்க ஏனைய அரசியல்வாதிகள்,அரசியல் தலைவர்களை இழிவுபடுத்தி பேசும் சுபாவம் அற்றவர். அவர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவர் பேசியது கிடையாது. ஆனால் அவரை இழிவுபடுத்தி பேசியவர்கள் அநேகர். அவற்றை அமையோடு கேட்டுக் கொண்டிருக்கும் சுபாவம் உடையவர்.

தனது பதவிப் பிரமாணத்தின் பின்னர் கங்காராம விஹாரையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள், சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டுக்கு தீர்வு பெற்றுத் தருவதாக கூறினார்.

பிரித்தானிய ஊடகவியலாளர் ஒருவர், "தனியொரு எம்.பியாக எவ்வாறு நீங்கள் பிரதமராக வந்தீர்கள்?" என்று கேட்ட போது "1939 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றில் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு வெறும் 4 பேர் மட்டுமே ஆதரவளித்தார்கள். ஆனால் அவர் எப்படி பிரதமரானார்? அப்படியே நானும் செய்தேன்" எனப் பதிலளித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உண்மையிலேயே அரசியல் சாணக்கியம் மிகுந்தவர். எந்தவொரு எதிர்மறை விமர்சனங்கள் குறித்தும் அவர் அலட்டிக் கொண்டதில்லை. மனம் வருந்தியதுமில்லை. அவற்றையெல்லாம் தனது அரசியல் பயணத்துக்கான வெற்றிப் படிகளாகவே அவர் எடுத்துக் கொள்வது வழக்கம். அவரது அரசியல் பயணத்தின் வெற்றிக்கு இவ்வாறான சுபாவமே காரணம் எனலாம்.

அவ்வாறான பொறுமை, சகிப்புத் தன்மை காரணமாகவே 6வது முறையாக பிரதமராக பதவியேற்று உலக சாதனை படைத்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. கடந்த பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க 20000 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். எனினும் அவர் தேசியப்பட்டியல் உறுப்பினராகி நாடாளுமன்றத்தில் தெரிவானார். அப்போதும் அவர் தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் அரசியல் ரீதியான விமர்சனங்களை தனது பயணத்துக்கான சவால்களாகவே அவர் எடுத்துக் கொண்டார். அதுவே அவரது வெற்றிக்கான காரணம் எனலாம்.

அவர் ஆசியாவிலேயே மதிக்கப்படுகின்ற தலைவர் ஆவார். ஆசிய நாடுகளில் விரல் விட்டு எண்ணக் கூடிய அரசியல் தலைவர்களில் ரணிலும் ஒருவர் ஆவார். தலைமைத்துவ ஆற்றல் மிக்கவர் அவர். அரசியல் அனுபவம் கொண்டவர் ரணில். அரசியலில் மிகுந்த முதிர்ச்சி கொண்டவராகப் போற்றப்படுகின்றார்.

> **இலங்கை அரசியல் வரலாற்றில் ரணில் விக்கிரமசிங்க ஏனைய அரசியல்வாதிகள், அரசியல் தலைவர்களை இழிவுபடுத்தி பேசும் சுபாவம் அற்றவர். மற்றைய அரசியல் வாதிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவர் பேசியது கிடையாது. ஆனால் அவரை இழிவுபடுத்தி பேசியவர்கள் அநேகர். அவற்றை அமைதியோடு கேட்டுக் கொண்டிருக்கும் சுபாவம் உடையவர் ரணில்**

தேசியப்பட்டியலில் பாராளுமன்றம் சென்று பிரதமரானதன் மூலம் ரணில் வரலாறு படைத்தார். இலங்கையைத் தவிர உலகில் யாரும் அப்படி ஆட்சிக்கு வரவில்லை என்பது தெரியவந்துள்ளது. அதனால்ஆறாவது முறையாக பிரதமராக பதவியேற்றார். இதுவே உலக சாதனைகளில் ஒன்றாகவும் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரலாறு காணாத அரசியல் பொருளாதார சிக்கலில், நிச்சயமற்ற நிலையில் தவிக்கும் போது ஆறாவது முறையாக பிரதமர் பதவி ஏற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசியலில் என்றுமே தவிர்க்க முடியாத ஒரு ஆளுமையாக திகழ்ந்து வருகின்றார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியை ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன சந்தித்திருந்தன. தேர்தலின் ஊடாக ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை கூட ஐக்கிய தேசியக் கட்சியினால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.



எனினும், இலங்கையில் காணப்படுகின்ற தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் ஊடாக, ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு நாடாளுமன்ற ஆசனம் கிடைத்தது.

இந்த ஒரு நாடாளுமன்ற ஆசனத்தின் ஊடாக, நாடாளுமன்ற பிரவேசத்தை பெற்ற ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்திலுள்ள 225 பேருக்கு மத்தியில் தனியொருவராக அமர்ந்து, தனது அரசியலை நடத்தி வந்தார்.

இவ்வாறு தனியொருவராக நாடாளுமன்றத்தில் அமர்ந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க, இன்று பிரதமர் என்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளார். எனவேதான் இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத ஆளுமையாக பரிமாணம் பெற்றுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

**எஸ்.ஸ்ரீ...**

# பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கம் வகுத்துள்ள எதிர்காலத் திட்டங்கள்

**அரசாங்க சேவைகளில் பல்லாண்டுகளாக பணியாற்றி விட்டு ஓய்வு பெறுவோர், ஏதாவதொரு அமைப்பு ரீதியாக ஒன்றுகூடி கலந்துரையாடல் மற்றும் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் வாழ்க்கையில் முதுமைக் காலத்திலும் உளவள மற்றும் உடல் ரீதியிலான வலிமையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது என்று இலங்கை பாராளுமன்ற இளைப்பாறிய பணியாளர் சங்கத்தின் புதிய தலைவர் எஸ்.இரத்னராஜா தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கம் ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வூதியம் மற்றும் அவர்களின் நலனோம்பு விடயங்களிலும் அக்கறையுடன் செயல்பட்டு வருவதாகவும் சங்கத்தின் தலைவர் இரத்னராஜா மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கத்தின் 2022/23 ஆம் நிதி ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகங்களான எஸ்.நிஹால் செனிவிரத்ன மற்றும் பிரியாணி விஜேசேகர, முன்னாள் பாராளுமன்ற பணிப்பாளர் எம்.கே.ராகுலன், முன்னாள் படைக்கல சேவிதர் விஜய பள்ளியகுருகே உள்ளிட்ட முன்னாள் உயரதிகாரிகள் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பிரதம போஷகராகவும், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக, போஷகராகவும் தெரிவாகினர். எம்.கே.ராகுலன், பீ.ஏ.ஜயதிலக, டீ.எஸ்.சகலசூரிய, டீ.எஸ்.எல்.ஜயக்கொடி, எச்.எல்.ஆரியரத்ன, ஏ.ஏ.ஜே.குலதிலக ஆகியோர் ஆலோசகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் புதிய தலைவராக எஸ்.இரத்னராஜா, செயலாளராக கே.ஏ.டீ.ஆர்.சேபாலிகா, பொருளாளராக கே.டீ.ஜயவர்தன தெரிவாகினர். மேலும் உதவி உத்தியோகத்தர்களுடன் பதினைந்து நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தைச் சேர்ந்த எழுபத்தைந்து வயது நிரம்பிய உறுப்பினர்கள் விஷேட பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகங்களால் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.



இந்தச் சங்கம் 'ஓய்வு பெற்ற முன்னைய பாராளுமன்ற ஊழியர்களின் சங்கம்' என்ற பெயரில் 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டில் சங்கத்தின் பெயர் 'பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கம்' என பெயர் மாற்றம் பெற்று சேவைகளை தொடர்கின்றன. சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்கள் பலர் இயற்கையெய்திய நிலையில், தற்போது 185 உறுப்பினர்களுடன் சங்கம் இயங்கி வருவதாகவும் தலைவர் தெரிவித்தார்.

சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் பொருளாதார ரீதியிலும் மற்றும் நீண்ட கால சுகவீனம் காரணமாகவும் வீட்டிலேயே கஷ்டத்துடன் காலத்தைக் கடத்துகின்றனர். இவ்வாறான உறுப்பினர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் சென்று பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறி, நிதியுதவி மற்றும் பொருட்களை வழங்கி உபசரிப்பது சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். உறுப்பினர்களின் பிள்ளைகளின் கல்வித் தகைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தி உதவி, ஒத்தாசைகளை வழங்குவதும் சங்கத்தின் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

### வன்முறைகளுக்கு உதவிய

# 59 சமூக வலைத்தளங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு மற்றும் நாட்டின் சில பிரதேசங்களில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்களுக்கு சமூகவலைத்தளங்கள் மூலம் உதவி, அனுசரணைகள் வழங்கியவர்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு செயற்பட்ட 59 சமூக வலைத்தளங்களின் நிர்வாகிகள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துள்ள அவர், அவர்கள் நாட்டிற்கு வெளியே வசித்தாலும் மேற்படி குற்றச்செயல்கள் தொடர்பில் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். அவ்வாறானவர்களுக்கு எதிராக கணனி குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அதன்மூலம் 5 வருடத்திற்கு குறையாத சிறைத்தண்டனையை வழங்குவதற்கும் வாய்ப்புகள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரத்தினபுரி மாவட்டம் உட்பட 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை!

காவத்தை தினகரன் விசேட நிருபர்



நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட, கிரியெல்ல, எலபாத்த, அயாகம, நிவித்திகல, எஹெலியகொட, கலவான, பலாங்கொடை, இம்புல்பே, மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கேகாலை மாவட்டத்தின் தெரணியகல, யட்டியாந்தோட்டை, அரநாயக்க, தெஹியோவிட்ட மற்றும் புளத்கொஹுபிட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்ஹள மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை, அம்பகமுவ மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர மற்றும் கொட்டபொல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் கங்க இஹல கோரல மற்றும் பஸ்பாகே கோரளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி – அரச எம்.பிக்கள்...

தினம் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் பாராளுமன்றத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பன குறித்து இதன்போது கலந்துரையாடப்பட உள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 9 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து, ஜனாதிபதிக்கும், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே இடம்பெறவுள்ள முதலாவது சந்திப்பு இதுவாகும்.

## பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக ஆராயும் முகமாக பாராளுமன்றம் கூட்டத்தொடரை தொடர்ந்து நடத்துவதன் முக்கியத்துவம் கட்சித் தலைவர்களால் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான செயற்குழுவின்போது சுட்டிக்காட்டி இருந்தது.

அதன் பிரகாரம் பாராளுமன்றம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கூடுவதில் எந்த மாற்றமும் இல்லை.

இதேவேளை, எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய பின்னர், விசேட அனுமதியொன்றை பெற்றுக்கொண்ட பின்னர் ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு 12ஆம் திகதி இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ரணிலுடன் இணைந்து...

அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். அவரது நியமனம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தின் விரைவான உருவாக்கம் நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் முதல் படியாகும் என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து நிரந்தர தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கும், முக்கிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலங்கை மக்களுக்கு தனது ஒத்துழைப்பை வழங்குவதாக அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிய அமைச்சரவை...

நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதா இல்லையா என்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வரும் நிலையில் அதற்கான இறுதித் தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் அதற்கு முன்பதாக அமைச்சரவை நியமிக்கப்பட்டு அமைச்சர்களுக்கான சத்தியப் பிரமாணம் வழங்கப்படும் என்றும், எனினும் அமைச்சர்களுக்கான விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இரண்டு வாரங்கள் தேவைப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.(ஸ)

## எந்தவொரு தமிழ்...

ஈடுபட வேண்டிய அவசியமில்லை என இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டில் இடம்பெறும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் நிகழ்வுகளும் அரசியல் தீர்மானங்களும் ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு என்பவற்றுக்கு அமைவாக அமைய வேண்டும். போராட்டங்களின் போது கொலைகள், தீ வைப்பு, சொத்து சேதம் என்பன இடம்பெறக் கூடாது என தெரிவித்துள்ளார்.

2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த போது தென்னிலங்கை மக்களால் மகத்தான மனிதர் என போற்றப்பட்ட மஹிந்த ராஜபக்சவை பதவியில் இருந்து தூக்கி எறிய வேண்டும் என்ற கோபத்தில் தற்போது தென்பகுதி மக்கள் உள்ளனர்.

தமிழ் மக்கள் வெறுப்பு அரசியலை விரும்பவில்லை என்றும் தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் மற்றும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அரசியல் கட்டமைப்பையே விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எம்.பி ஒருவருக்கு ஆறு...

உத்தியோகத்தர்கள் வீதம் வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பிரதேச பொலிஸ் நிலையங்களில் தற்போது கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் தமக்கு விருப்பமானவர்களை அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவில் இணைத்துக்கொண்டு தமது பாதுகாப்பு சேவைகளுக்கு அவர்களை ஈடுபடுத்திக் கொள்ள கூடிய வாய்ப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் நாட்டில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் அவர்களின் வீடுகளின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் மரணமடைந்துள்ளார்.

அதனைக் கவனத்திற் கொண்டே பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு பொலிஸ் மாஅதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். (ஸ)

## புதிய பிரதமருக்கு மனோ MP...

மனோ கணேசன் தனது வாழ்த்தினை புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு தெரிவித்தார். "ரணிலுக்கு இழக்க எதுவுமில்லை" என்ற கருத்தையும் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளார்.

"எமது ஐக்கிய மக்கள் கூட்டணி, ஆட்சி பொறுப்பை ஏற்காமைக்கு காரணம், பிரதான எதிரணியான எமது கொள்கை கோட்பாடுகள். நமது கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி. நாம், எமது தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் அணி. எமது மக்களை நாம் நேரடியாக பிரதிநிதித்துவம் செய்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ள அதேவேளை

இந்த நிமிடம்கூட, எமது அரசியல் குழு முடிவு செய்தால், மிக பிரபலமான அமைச்சு பதவிகளை பெற்று ஆட்சியில் நாம் பங்கு பெறலாம். இதற்கான அழைப்பு எமக்கு எப்போதும் இருக்கிறது. இதை அனைத்து தரப்பினரும் மனதில் கொள்ள வேண்டும். ஆனால், அதை நாம் செய்யவில்லை.

மாறாக வெளியிலிருந்து பிரதமரை, எமது "முன்னாள் பிரதமரை" வாழ்த்துகிறோம். தற்சமயம், தமிழ் முற்போக்கு கூட்டணியாக, நாம் எதிரணியில் இருக்கிறோம். நடப்புகளை அவதானித்து பொறுப்புடன் கட்சியாக பயணிக்கிறோம்" என தமது கட்சியின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.

## புதிய பிரதமருக்கு இந்தியா ....

இது தொடர்பாக தூதரகத்தின் வெளியிட்ட டுவிட்டர் பதிவில்,

"இலங்கை பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் அடிப்படையில், ஜனநாயக நடைமுறைகளுக்கு இணங்க அமைக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அரசியல் ஸ்திரத்தன்மை குறித்தும் நம்பிக்கை கொள்வதாக குறிப்பிட்டுள்ளது.

மேலும் இலங்கை மக்களுக்கான இந்தியாவின் உதவிகள் தொடரும் எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

## வன்முறை செயற்பாடுகளை அறிவிக்க ...

கொள்ளையிடுதல், தாக்குதல் நடத்துதல் போன்ற பல்வேறு வன்முறைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கும், வன்முறையாளர்களை அடையாளம் காண்பதற்காகவும் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதன்படி, 076 739 39 77 அல்லது 011 244 11 46 ஆகிய இலக்கங்களுக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தகவல் வழங்க முடியும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், 118 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கும் வன்முறைச் செயற்பாடுகள் தொடர்பில் அறிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, கடந்த 9ஆம் திகதி காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு அருகில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது, இடம்பெற்ற தாக்குதல்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன்படி, 011 24 22 176, 011 23 20 145, 071 85 92 087, 071 85 94 942 மற்றும் 071 85 94 901 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு இது தொடர்பான தகவல்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவசியமான தருணத்தில்...

இதிலிருந்து மீள வேண்டும். இதனை எம்மால் தனித்து செயற்படுத்த இயலாது. ஏனைய நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் உதவி அவசியமாகும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் மாலை புதிய பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அவர் பிரதமராக பதவியேற்கும் ஆறாவது சந்தர்ப்பம் இதுவாகும். இந்த நிலையில், புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவுக்கு, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ட்விட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதேநேரம், புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்புடன் உள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். அவர் பிரதமராக நியமிக்கப்பட்டமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை விரைவாக உருவாக்குதல் என்பன நெருக்கடியை எதிர்கொள்வதற்கும், ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் முதல் படியாகும் என்றும் அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் அடிப்படையில், ஜனநாயக நடைமுறைகளுக்கு இணங்க அமைக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதுடன், அரசியல் ஸ்திரத்தன்மை குறித்தும் நம்பிக்கை கொள்வதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் டவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கான அவரின் முயற்சிகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முழுமையான ஆதரவளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்வுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், புதிய பிரதமருக்கு தமது ட்விட்டர் தளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## தமிழகத்திலிருந்து நிவாரண...

தெரிவிக்கின்றன. இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவியாக தமிழகத்திலிருந்து அனுப்பப்படவுள்ள நிவாரணப் பொருட்கள் முதல் கட்டமாக எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழகத்தில் இருந்து இலங்கை வருகின்றன. சென்னை துறைமுகத்திலிருந்து கப்பலில் அரிசி மற்றும் மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இலங்கையில் தவறான பொருளாதார கொள்கை முடிவுகளால் கடுமையான பொருளாதா சீரழிவு ஏற்பட்டுள்ளது. இங்கு அத்தியாவசியப் பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்து விட்டது. இதனால் பொதுமக்கள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் இலங்கை மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கொடுத்து உதவுவதற்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன் வந்தார். இலங்கை மக்களுக்கு ரூ. 80 கோடி மதிப்புள்ள 40 தொன் அரிசி, ரூ. 28 கோடி மதிப்புள்ள 137 வகை மருந்துகள், ரூ. 15 கோடி மதிப்புள்ள 500 தொன் பால் மா ஆகியவை வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

இதற்காக தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு மத்திய அரசும் இதற்கு அனுமதி வழங்கியது.

இதையடுத்து இலங்கை மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்க 04 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கொண்ட குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ், நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குனர் எஸ்.பிரபாகர், ஆவின் நிர்வாக இயக்குநர் சுப்பையன், மருத்துவப் பணிகள் கழக நிர்வாக இயக்குநர் தீபக் ஜோசப் ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த குழு இலங்கைக்கு தமிழக அரசு சார்பில் நிவாரணப்பொருட்களை அனுப்பும் பணியை மேற்கொண்டு வருகிறது. தற்போது நிவாரணப் பொருட்களை பொதி செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த பார்சலில் 'தமிழ்நாட்டு மக்களிடமிருந்து அன்புடன்' என்று அச்சிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 16 ஆம் திகதி (திங்கட்கிழமை) தமிழகத்தில் இருந்து நிவாரணப் பொருட்கள் இலங்கை வருகிறது.

முதல் கட்டமாக 10 ஆயிரம் தொன் அரிசி மற்றும் பால் மா, மருந்து வகைகள் உள்ளன. அதன் பின்னர் மீண்டும் எதிர்வரும் 22 ஆம் திகதி 02ஆவது கட்டமாக இலங்கைக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிய வந்துள்ளது.

# புதிய பிரதமர் ரணிலுக்கு சுயேட்சைச் குழுவினர் நிபந்தனையற்ற ஆதரவு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவளிப்பதாக மஹிந்த அரசில் இருந்து விலகிய 10 கட்சிகளின் சுயேட்சைக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சிங்கள வானொலி ஒன்றுக்கு சுயேட்சைக் குழுவின் உறுப்பினரான வீரசுமண வீரசிங்க தெரிவிக்கையில், "எந்தவொரு சலுகைகளையும் பெறாமல் நாட்டின் சார்பாக பிரதமரின் வேலைத்திட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவளிக்கவுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

# 15, 16ம் திகதிகளில் அனைத்து மதுபான சாலைகளுக்கும் பூட்டு

## கலால் வரி திணைக்களம் அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்




வெசாக் பண்டிகை தினத்தையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை 15ஆம் திகதியும் 16 ஆம் திகதி திங்கட்கிழமையும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படவுள்ளன.

அது தொடர்பில் நேற்று கலால் வரி திணைக்களம் விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அதற்கிணங்க வெசாக் பண்டிகை தினங்களில் மதுபான விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வோரின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் நிபந்தனைகளை மீறி செயற்படும் மதுபான சாலைகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கலால்வரி திணைக்கள ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.(ஸ)

## அடுத்தகட்ட அரசியல்... 03ஆம் பக்கத் தொடர்

அரசியல் ஸ்திரமற்ற தன்மை தீவிரமடைந்துள்ளது. பொருளாதார மீட்சிக்கு நாட்டில் ஸ்திரமான அரசியல் கட்டமைப்பு காணப்பட வேண்டும்.நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு ஜனாதிபதி முன்னெடுக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள கூடியதாக அமையும். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்தக்கட்ட அரசியல் குறித்து இவ்வாரகாலத்திற்குள் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும்.நாட்டு மக்களும் தவறான முறையில் வழிநடத்தப்பட்டுள்ளார்கள்.வெகுவிரைவில் அனைத்து உண்மைகளையும் பகிரங்கப்படுத்துவோம் என்றார்.

## தமிழ் நாட்டு அரசால்... 03ஆம் பக்கத் தொடர்

நிலையின்போது, கொள்முதல் செய்ய விலைமனு வெளிப்படைத் தன்மை சட்டத்தில் விலக்களிப்பு உள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசுத் தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், வழக்கில் எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது எனக் கூறி, விசாரணையை ஒத்தி வைத்ததாக இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

## கொழும்பு தமிழ்ச் சங்கம்... 03ஆம் பக்கத் தொடர்

புரிந்துகொள்வதற்கும் அவர் ஆற்றிய பணி மிகச் சிறப்பானது. பல வருடங்களுக்கு முன்னர், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அவர் நிகழ்ச்சிகள் சிலவற்றை நடத்தியிருந்தார். அவற்றுக்கு சிறுவர்கள் மட்டுமன்றி, பெரியோரும் திரண்டு வந்து இரசித்தமை எம்மால் மறக்கமுடியாதது.

வில்லுப்பாட்டு என்கின்ற, தமிழரது அருங்கலையை மிகவும் சுவையாக, மக்களைக் கவரும் முறையில் ஆற்றுவதிலும் அவர் திறமை பெற்றிருந்தார். பாடசாலைகளில், மாணவர்களுக்கு அதனைக் கற்பிக்கவும் அவர் பின்னிற்கவில்லை. அவரது குரல், முகபாவங்கள், சிறுவரைக் கவரும் விதத்திலான கதை சொல்லல் என்பவை என்றும் இலங்கை மக்களின் நினைவை விட்டு அகலாது. அவர், ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் தனது துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக வலம் வந்தார்.

அடக்கம் மிக்க ஓர் ஒப்பற்ற கலைஞராக வாழ்ந்து மறைந்த திரு. மாஸ்டர் சிவலிங்கம் அவர்களுக்கு பொழும்புத் தமிழ்ச்சங்கம் தனது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அவரது குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது என அந்த அனுதாப செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## SJBயில் எவருமே அமைச்சு...

வகிக்கும் பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இல்லை எனவும், முடிந்தால் பாராளுமன்றத்தில் அவர் பெரும்பான்மையை காட்டுமாறு சவால் விடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## தனியார் வகுப்புக்களுக்கு...

அத்துடன், பாடங்கள் தொடர்பான ஆலோசனைகள், கருத்தரங்குகள் என்பனவற்றை நடத்தவும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன அறிவித்துள்ளார்.

## இலங்கையருக்கு வீசா வழங்கும் ...

நிறுத்திவிட்டதாக வெளிவந்துள்ள செய்திகளை இந்திய உயர் ஸ்தானிகராலயம் திட்டவட்டமாக மறுக்கிறது.

கடந்த சில நாட்களுக்கு முன், எமது விசா பிரிவு ஊழியர்கள், பெரும்பாலான இலங்கைப் பிரஜைகள், அலுவலகத்துக்கு வர முடியாததால், வீசா வழங்கல் செயல்பாட்டில் சிக்கல்கள் இருந்தன. எமது அலுவலக செயல்பாட்டை விரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வர முயற்சி செய்து வருகிறோம்.

இலங்கையருக்கு இந்தியாவுக்கான பயணத்தை எளிதாக்குவதில் நாம் உறுதியாக இருக்கிறோம். இந்தியர் இலங்கையில் இருப்பது போன்று இலங்கையரும் இந்தியாவில் வரவேற்கப்படுகிறார்களென்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## நீண்ட நாட்களின் பின்...

நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பொருளாதாரத்தின் சரிவு நிறுத்தப்படும் என்று பரவலாக நம்பப்படுகிறது.அத்துடன், ஜப்பானிடமிருந்து 2 பில்லியன் டொலர்களைப் பெறுவதற்கான பேச்சுக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், ரூபாவிற்கு எதிரான அமெரிக்க டொலரின் பெறுமதி சரிய ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மே 14
சனிக்கிழமை



# மன்னாரில் பகல் நேரங்களில் நீர் வழங்கலில் அழுத்தம் குறைவு

**(மன்னார் குறூப் நிருபர்)**



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு காரணமாக மன்னார் நகர பகுதிகளில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் பகல் நேரங்களில் வழங்கப்படும் நீர் வழங்கலின் அழுத்தம் குறைவாக காணப்படும் என மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இதனால் பகல் நேரங்களில் எமது பாவனையாளர்கள் துரிதகதியில் நீரை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை என்பன இதற்கான காரணமாகவுள்ளது. எனவே முருங்கனிலிருந்து மன்னாருக்கு நீரை விரைவுப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மன்னார் நகர பகுதிகளில் நீர் இணைப்பு பெற்றுள்ள பாவனையாளர்கள் நாளாந்தம் இரவு நேரங்களில் தமது வீடுகளிலுள்ள நீர் தாங்கிகள் அல்லது கொள்கலன்களில் நீரினை சேமித்து வைத்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### சிரமங்களுக்கு மத்தியில்

# மன்னாரில் எரிபொருள் விநியோகம்



**(தலைமன்னார் விஷேட நிருபர்)**

மன்னாரில் ஒரு வாரத்துக்குப் பின்னர் நேற்று மண்ணெண்ணெய் மாந்தை மேற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கிடைத்துள்ளமையால் நீண்ட வரிசையில் நின்ற நுகர்வோர் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதை காணக்கூடியதாகவிருந்தது. மன்னார் எரிபொருள் நிலையங்களில் தற்பொழுது டீசலுக்கு கடும் தட்டுபாடு நிலவி வந்தது. எனினும் பெற்றோல் தற்பொழுது இங்குள்ள எரிபொருள் நிலையங்களில் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் தங்கள் வாகனங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுச் செல்வதையும் காணக்கூடியதாகவிருந்தது. மண்ணெண்ணெய் ஒரு குடும்பத்துக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த பொழுதும் மண்ணெண்ணெய் குறைவாகவே வந்துள்ளமையால் ஒரு நபருக்கு 200 ரூபாவுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

மீனவர்களுக்கு ஏற்கனவே மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற தீர்மானத்துக்கு ஏற்ப எரிபொருளை ஒவ்வொரு மீனவ சங்கங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் மண்ணெண்ணெய் மற்றும் டீசல் தட்டுப்பாட்டால் தனியார் போக்குவரத்து சேவையாளர்கள் மற்றும் கடற்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருட்கள் வந்ததும் பொலிஸாரின் பாதுகாப்பிலேயே வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று வல்வெட்டித்துறையில் இடம்பெற்றது. வல்வெட்டித்துறை சல்லியாவத்தை அம்மன் கோவிலடியில் நேற்று காலை 10.30 மணியளவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு கஞ்சி வழங்கப்பட்டது. (படம்: யாழ். விசேட நிருபர்)

# யாழில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

**யாழ். விசேட நிருபர்**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் செம்மணியில் நேற்று காலை 11 மணியளவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



## அங்கஜன் எம்.பி அலுவலக பதாகைக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் சண்டிலிப்பாய் தொகுதி அலுவலக பதாகைக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் சண்டிலிப்பாய் தொகுதி அலுவலகத்தின் முன் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீ வைக்கப்பட்டது. எனினும் பகுதியளவில் மட்டுமே பதாகை சேதமடைந்தது.

இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலக, சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவரை கைது செய்தார்.

சந்தேக நபர் வேலைவாய்ப்புப் பெற்றுத்தரவில்லை என்ற விரக்தியில் அலுவலகப் பதாகைக்கு தீ வைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இளைஞன் ஒருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதையூட்டும் 300 மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் பகுதியை சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இளைஞனை கைது செய்த பொலிஸார் , அவரது உடைமையில் இருந்து போதை பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் கையடக்க தொலைபேசிகள் திருடிய ஒருவர் கைது

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்.போதனா மருத்துவமனையில் நீண்ட காலமாக கையடக்கதொலைபேசிகளைத் திருடி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து பெறுமதி வாய்ந்த கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். போதனா மருத்துவமனையில் நீண்ட நாள்களாக ஊழியர்கள், நோயாளிகளின் கையடக்கதொலைபேசிகள் திருட்டுப்போயிருந்தன.

கதைத்துவிட்டுத் தருவதாக தெரிவித்துவிட்டு அபகரித்துச் செல்வது, சார்ஜ் போடும்போதும் மற்றும் நோயாளிகள் மலசல கூடங்களுக்கு செல்லும் போதும் கையடக்கதொலைபேசிகள் திருடப்பட்டுவந்துள்ளன.

அவை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையிலேயே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

### ஐந்து இடங்களில் சங்கிலி அறுப்பு:

# பொலிஸாரின் சுற்றிவளைப்பில் ஹெரோயினுடன் சிக்கிய இளைஞர்கள்

**வவுனியா விசேட நிருபர்**





வவுனியாவில் தங்கசங்கிலி திருட்டில் ஈடுபட்ட இரு இளைஞர்களை ஹெரோயினுடன் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து அறுக்கப்பட்ட சங்கிலிகளையும் மீட்டுள்ளனர்.

இரு இளைஞர்களும் மகாறம்பைக்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் அண்மையில் மோட்டர் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் பொலிஸார் முறைப்பாடு செய்துள்ளனர். அதன்பின்னர் சில நாட்களில் திருநாவற்குளம், வைரவபுளியங்குளம், யாழ் வீதி, பூந்தோட்டம் சந்தி, அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் வீதியால் சென்ற பெண்களைப் பின் தொடர்ந்து சென்று அவர்களிடம் முகவரி விசாரிப்பது போல வந்து அணிந்திருந்த சங்கிலிகள் அறுத்துச் செல்லப்பட்டதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் நிலையத்தில் தனித் தனி முறைப்பாடுகள் கடந்த ஒரு மாதத்திற்குள் கிடைக்கப்பெற்றிருந்தன.

6 இடங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ. எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில், வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் கியான் தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திசாநாயக்கா (37348), விக்கிரமசூரிய (36099), டிலீபன் (61461), உபாலி (60945) பொலிஸ் கான்ஸ்டபிள்களான சங்கய ரொகான் (31043), தயாளன் (91792), திசாநாயக்கா (18219) ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மகாறம்பைக்குளம் பகுதியில் இரண்டு கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மோட்டார் சைக்கிள் திருட்டு மற்றும் 5 இடங்களில் சங்கிலி அறுப்பு சம்பவங்கள் உள்ளிட்ட சம்பவங்களுடன் தொடர்பு இருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து இரண்டு கிராம் ஹெரோயின், அறுக்கப்பட்ட ஐந்து சங்கிலிகள், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் பூந்தோட்டம் மற்றும் மதீனா நகர் பகுதிகளைச் சேர்ந்த 19 மற்றும் 22 வயதுடைய இளைஞர்களாவர். மேலதிக விசாரணைகளின் பின்னர் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த வவுனியா பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மன்னாரில் 16 சோதனை சாவடிகள்

**(தலைமன்னார் விஷேட நிருபர் )**

போதைப் பொருளை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு மன்னாரில் 16 சோதனை சாவடிகளை நிலைநாட்டி வருவதால் பொது மக்கள் அசௌரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக மன்னார் நுழைவாயில் உள்ள சோதனை சாவடியால் சாதாரண பொதுமக்கள் மற்றும் அரசு அரச சார்பற்ற ஊழியர்களும் பாதிப்புகளுக்குள்ளாகி வருவதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் 54 ஆவது படைப்பிரிவின் உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் தர்சன விஜயசேகரவை சந்தித்து கருத்தை முன்வைத்துள்ளது. இச்சந்திப்பைத் தொடர்ந்து பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் மன்னாரில் 13 சோதனைச்சாவடிகள் போதைப் பொருள்தடுப்பு எனும் போர்வையில் மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றன.

இவற்றை அகற்றுமாறு பல முறை கோரிக்கை விடுத்தும் தீர்வின்றி தொடர்கின்றன. அரச உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் எந்த தடையும் இன்றி பயணிப்பதால் மக்களின் அவல நிலை புரியாதவர்களாக இவர்கள் இருந்து வருகின்றனர்.

போதைப்பொருள் தடுப்பு எனும் காரணத்தை வைத்து மன்னார் நுழைவாயில் உள்ள சோதனைச் சாவடி சாதாரண பொதுமக்களின் அன்றாட வாழ்வியல் செயற்பாட்டில் பெரும் பின்னடைவை ஏற்படுத்துவதுடன் அரச தனியார் பணியாளர்கள் நேரத்திற்கு கடமைக்கு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைகாணப்படுகின்றது.



முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வு முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை வளாகத்திற்கு அருகில் நேற்று வழங்கி வைக்கப்பட்டது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொது அமைப்புகள் இணைந்து முன்னெடுக்கும் இந்த கஞ்சி வழங்கும் திட்டமானது நேற்று இரண்டாவது நாளாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: மாங்குளம் குரூப் நிருபர்)

# கிழக்கின் குரல்



## பொருட்களை பதுக்குதல், அதிக விலைக்கு விற்பதை தவிர்க்கவும்

### அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

**ஒலுவில் விசேட நிருபர்**

தற்போதைய நிலையில் பொருட்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதனை வர்த்தகர்கள் தவிர்க்க வேண்டுமென அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீஸன் தெரிவித்தார்.

இக்கட்டான கால கட்டத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் பொறுப்புடன் செயற்பட்டு பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்க வேண்டுமென கேட்டுள்ளார்.

சில பிரதேசங்களில் வர்த்தகர்கள் பொருட்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

திடீர் சுற்றிவளைப்பின் போது அசாதாரண சூழல் நிலையைப் பயன்படுத்தி சந்தையில் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து அத்தியாவசியப் பொருட்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தல், பொருட்களை பதுக்கி வைத்தல், பொருட்களை தன்வசம் வைத்துக் கொண்டு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து நுகர்வோரை திருப்பி அனுப்புதல் போன்றவை கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறித்த வர்த்தக நிலையம் மூடப்படுமெனவும் தெரிவித்தார்.

எனவே, இக் காலகட்டத்தில் பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் முன்வர வேண்டுமென கேட்டுள்ளார்.

### முஸ்லிம் மக்கள் இன ரீதியிலான கட்சிகளுக்கு

## வாக்களிப்பதை தவிர்த்து தேசிய நீரோட்டத்தில் இணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

முஸ்லிம்கள் எதிர்வரும் தேர்தல்களில் இன ரீதியிலான அரசியல் கட்சிகளுக்கு வாக்களிப்பதனை தவிர்த்து தேசிய நீரோட்டத்தில் இணைந்து இனங்களுக்கு இடையிலான இன ஒற்றுமையையும் ஐக்கியத்தை உறுதிப்படுத்த முன்வர வேண்டும் என சமாதான ஊடக அமைப்பின் தலைவர் எம்.எம்.ஜெஸ்மின் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் முஸ்லிம்கள் இலங்கையிலுள்ள தேசிய கட்சிகளுக்கே வாக்களித்து வந்தனர். அப்போது ஏனைய சமூகங்களுக்கடையில் முஸ்லிம்களைப் பற்றிய எந்தவிதமான சந்தேகப் பார்வையும் இருக்கவில்லை. ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்தார்கள். எல்லோரும் இணைந்து நமது தேசத்தை கட்டியெழுப்புதற்கான சகலவிதமான நிகழ்வுகளிலும் பங்கேற்றனர்.

1989 ஆம் ஆண்டுக்கு பின்னர் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சியினை ஆரம்பித்ததிலிருந்து முஸ்லிம் மக்கள் தேர்தல்களின் போது தேசியக் கட்சிகளுக்கு வாக்களிப்பதனை தவிர்த்து முஸ்லிம் காங்கிரசுக்கு வாக்களிக்க ஆரம்பித்தனர்.

அன்றிலிருந்து பெரும்பான்மை மக்களிடையே முஸ்லிம் மக்களைப் பற்றிய சந்தேகமும் அவர்கள் மீது வெறுப்பும் ஆரம்பிக்கத் தொடங்கி அது விஸ்வருபம் எடுக்கத் தொடங்கியது.

தேர்தல் காலங்களில் மாறிமாறி தேசிய கட்சிகளுக்கு பேரினவாத கட்சியென்று வசைபாடித் திரிந்து முஸ்லிம் மக்களின் வாக்குகளால் வெற்றியடைந்த பின்னர் தாம் ஏசித்தீர்த்த கட்சிகளிடமே மந்திரி பதவிக்கும் சுகபோக வாழ்க்கைக்கும் தஞ்சமடைந்து வாக்களித்த மக்களை நடு ரோட்டில் விட்டுச் சென்ற சரித்திரத்தை எவராலும் மறக்க முடியாது.

எனவே நாட்டில் சின்னாபின்னமாய் போயுள்ள இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்று திரளவேண்டும் என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



புதிய பிரதமராக நேற்று முன்தினம் (12) பதவிப்பிரமாணம் செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முகமாக மட்டக்களப்பு நகர மணிக்கூட்டுக் கோபுரத்தின் அருகில் நேற்று (13) வாழ்த்துப் பதாதைகளை காட்சிப் படுத்தியதோடு பட்டாசுக்களை கொளுத்தி மகிழ்சி ஆரவாரம் செய்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கே.வி. லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட முகாமையாளர் எல்.பிரதாப், மாநகரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். படம்: மட்டக்களப்பு விசேட நிருபர்

## கிழக்கு பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

ஊரடங்கு சட்டம் நேற்று காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டதனை தொடர்ந்து காலை 7 மணிமுதல் பாடசாலைகளுக்கு அதிபர்களும் ஆசிரியர்களும் வருகை தந்திருந்த போதிலும் பாடசாலைக்கு மிக அண்மையில் இருக்கும் மாணவர்கள் ஒரு சிலரே பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் பணிப்புரையின் பேரில் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளையும் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 12.30 மணிவரை மேற்கொள்ளுமாறு வலய கல்விப் பணிப்பாளர்களினூடாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

வருகை தந்திருந்த மாணவர்களை ஒரு வகுப்பறைக்குள் வைத்து வருகை தந்திருந்த ஆசிரியர்களைக் கொண்டு கற்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தெரிவித்தார்.



சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு பூங்கா பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகிறது.
படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

## வெல்லாவெளி பிரதேசத்தில் கசிப்பு காய்ச்சுதல், விற்பனை அதிகரிப்பு

### மக்கள், பொது அமைப்புகள் விசனம்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

வெல்லாவெளி பிரதேசத்தில் கசிப்பு காய்ச்சி விற்பனை செய்வோர் அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள், பொது அமைப்புகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வெல்லாவெளி பிரதேசத்தில் கசிப்பு காய்ச்சும் தொழிலை மேற்கொள்ளுவோர், விற்பனை செய்வோர் அதிகரித்துள்ளனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள பக்கியெல்ல, 35, 36, 37, 38, 39, 40 ஆம் கொலணி,சின்னவத்தை, ஆனைகட்டியவெளி,கல்வெட்டை, மாலையர்கட்டு,வம்மியடியூற்று, போன்றவற்றில் இவ்வாறு சமுர்த்தி அட்டை கொடுப்பனவு பெறும் குடும்பங்களே இவ்வாறு கசிப்பு காய்ச்சும் தொழிலையும், விற்பனை செய்யும் தொழிலையும் சுமார் 10 வருடகாலமாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதன் காரணமாக பிரதேசத்தில் போக்குவரத்து செய்யும் ஊடகவியலாளர்கள்,பொதுமக்கள், பெண்கள், பாடசாலை மாணவிகள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பொலிசார், இராணுவத்தினர் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள்.



இவர்களின் செயற்பாடு காரணமாக பிரதேசத்தில் பல வன்முறைகள், டயர்போட்டு எரித்தல், பாலியல் ரீதியான வன்முறைகள், வன்மப்பேச்சுக்கள், சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வக்குரோத்து செயற்பாடுகள், குடும்ப வன்முறைகள்,பிரதேச இனத்துவேசம், குளறுபடிகள் உள்ளிட்ட பல விடயங்கள் நாளாந்தம் பதிவாகின்றது. அண்மையில் பாலையடிவட்டையில் மோட்டார் சைக்கிளுக்கு காற்று நிரப்பசென்ற ஊடகவியலாளர் ஒருவரை பட்டப்பகலில் கசிப்பு குடித்த மூன்று இளைஞர்கள் ஊடகவியலாளரின் ஊந்துருளியை தீவைத்து எரிக்க முற்பட்டுள்ளார்கள். இராணுவத்தின் உதவியுடன் பாதுகாத்த வரலாறும் இருக்கின்றது.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்கள அத்தியட்சகர், மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட சமுர்த்தி உதவிப்பணிப்பாளர்,கிழக்கு மாகாண பொலிஸ்மா அதிபர், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள், காத்திரமான நடவடிக்கையை எடுத்து கசிப்புத்தொழிலை நிறுத்துவதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்கின்றனர்.

## சீனா யுனான் மாகாணத்திலிருந்து உலர் உணவுப் பொதிகள்



**கிண்ணியா தினகரன் நிருபர்**

சீனாவின் யுனான் மாகாணத்திலிருந்து அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற உலர் உணவுப் பொருட்கள்

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கிண்ணியா பிரதேச செயலகத்தில் வைத்து வியாழக்கிழமை(12) வழங்கப்பட்டன. இந் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் நடைபெற்றது.

அதேவேளை கிண்ணியா பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பஹீமா றிஷ்வி, பதில் திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப் ஆகியோரோடு தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவின் கிராம உத்தியோகத்தர்களும் கிண்ணியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக பதுர்தீன் நியமனம்

கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக பதுர்தீன் நியமனம்

**பெரியநீலாவணை விசேட நிருபர்**



கல்முனை மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பான புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள மருதமுனையை சேர்ந்த பதுர்தீன் ஷர்மில் ஜஹான் நேற்று(12) தனது சத்தியப்பிரமாண பத்திரத்தை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபிடம் கையளித்து, பதவியேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் சபைச் செயலாளர் ஏ.எம்.ஆரிப், கட்சி ஆதரவாளர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எல் றபீக் ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் சமூக சேவகரும் வர்த்தகருமான பதுறுதீன் சர்மில் ஜஹான் புதிய உறுப்பினராக நியமிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவால் நியமன கடிதம் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

## மாற்றங்கள் என்பது வன்முறை இல்லாமல் நிகழ வேண்டும்

### மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம்

**கொக்கட்டிச்சோலை நிருபர்**

மாற்றங்கள் என்பது வன்முறை இல்லாமல் நிகழ வேண்டும் என கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.

இன்றைய நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

முழு இலங்கையிலும் அனைத்து இன சமூகமும் எதிர் நோக்கிய பொருட்களுக்கான விலையேற்றம், அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு முழு இலங்கைக்கும் ஆறு மாதமாக ஏற்பட்ட விடயமாகும். ஆனால் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக வடக்கு, கிழக்கில் ஒரு பொருளாதாரத் தடை அரசால் ஏற்படுத்தப்பட்டதை தமிழ் மக்கள் இன்னும் மறந்து போகவில்லை. மூவின மக்களும் ஆறுமாதகாலமாக நேரடியாகப் பாதிக்கப்பட்டதால் மாற்றத்திற்கான ஜனநாயகப் போராட்டங்கள் எழுச்சி பெற்றது.

எது எப்படியோ வடக்கு கிழக்கு மக்களும் பொருளாதாரத்தடை அரசியல் பிரச்சினைகள் 19ஆவது, 20ஆவது சட்டப் பிரச்சினைகள் தொடர்பாக ஒவ்வொரு தமிழர்களும் தங்களால் இயன்ற வன்முறையற்ற மானசிகமான உதவிகளை செய்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் இதே போராட்டத்தை தமிழர்கள் மட்டும் செய்திருந்தால் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படும், பலர் காணாமலும், அடையாளம் தெரியாமலும் தெருத் தெருவாக உறவினர்களைத் தேட வேண்டிய நிலை எமது சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும்.

இனிமேலாவது திருந்தி நடந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு, கொழும்பில் தேசிய ரீதியாக நிகழப் போகும் மாற்றங்கள் பொருளாதார விடயம், அரசியல் சார்ந்த விடயங்கள், 19ஆவது, 20ஆவது திருத்தச் சட்டம் இத்தோடு தமிழர்களின் அரசியல் உரிமை தொடர்பாகவும் அமுல்படுத்துவதற்கு தமிழ்த் தலைமைகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென்றார்.

## வெல்லாவெளி வயல் பகுதியில் வயோதிபரின் சடலம் மீட்பு

**மணல்சேனை நிருபர்**

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெல்லிக்காட்டு பிரதேசத்தில் உள்ள வயல் பிரதேசத்தில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை (13) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெல்லிக்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த (73) வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான அழகிப்போடி தங்கராசா என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற நீதவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை மிகவும் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. நாட்டில் ஊரடங்குச் சட்டம் சில மணித்தியாலங்கள் தளர்த்தப்பட்ட போதிலும், மலையகத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாகவும் மாணவர்களின் வருகை மிக குறைவாகவே நேற்றைய தினம் காணப்பட்டது.

படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்

# இரத்தினபுரி மாவட்டத்திற்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சீரற்ற காலநிலையால் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, கிரியெல்ல, எலபாத்த, அயாகம, நிவித்திகல, எஹெலியகொட, கலவான, பலாங்கொடை, இம்புல்பே, மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கேகாலை மாவட்டத்தின் தெரணியகல, யட்டியாந்தோட்டை, அரநாயக்க, தெஹியோவிட்ட மற்றும் புளத்கொஹுபிட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்ஹள மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை, அம்பகமுவ மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர மற்றும் கொட்டபொல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் கங்க இஹல கோரல மற்றும் பஸ்பாகே கோரளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி மாவட்டங்களில் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புதிய பிரதமருக்கு செந்தில் வாழ்த்து



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் புதிய பிரதமரின் எதிர்கால திட்டங்களை அவதானித்து வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பும் மக்களின் உணர்வுபூர்மான கோரிக்கை மற்றும் பொருளாதார மீட்சி குறித்து புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடத்திலுள்ள திட்டங்களை வெளிப்படுத்த வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனைத்துக்கட்சிகளின் ஒத்துழைப்பை கோரியுள்ள நிலையில் இ.தொ.க.வின் நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிட்ட அதன் தலைவர் செந்தில் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு மக்கள் உணர்வுபூர்வமாக கோரியுள்ளனர். பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்ததன் காரணமாக நாம் அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்றோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய நிலையில், புதிதாக பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு சம்பிரதாய ரீதியாக வாழ்த்துக்களை தெரிவித்துள்ளோம். நாம் அரசாங்கத்திலிருந்து விலகியமைக்கான காரணங்கள் தொடர்பில் அவருடைய அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் கரிசனைகளைக் கொண்டுள்ளோம் என அவர் கூறினார்.

குறித்த விடயங்கள் தொடர்பில் பிரதமரின் அறிவிப்புக்கள் வெளியான பின்னரே இ.தொ.கா கூடி ஆராய்ந்து உரிய தீர்மானத்தினை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்ததோடு என்றுமே மக்களின் கோரிக்கைக்கு ஏற்ற நிலைப்பாட்டில் இ.தொ.கா உறுதியாக நிற்கும் என்றும் தெரிவித்தார்.

# ஹற்றனில் ம.ம.முன்னணியின் முக்கிய கலந்துரையாடல்

நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பங்காளி கட்சியான மலையக மக்கள் முன்னணி ஹற்றனில் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளதாக அறிவித்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் இக்கலந்துரையாடல் முன்னணியின் ஹற்றன் தலைமை காரியாலயத்தில் நாளை ஞாயிற்றுகிழமை (15) காலை 10 மணியளவில் நடத்தப்படவுள்ளதாக முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் இக்கலந்துரையாடல் நேற்றைய அரசியல் நிலையும், எதிர்காலத்தில் மலையக மக்கள் முன்னணியின் செயற்பாடும் எனும் தொனியில் இடம்பெறவுள்ளது. மேலும் இது தொடர்பான அழைப்பு நேற்றுமுன்தினம் விடுக்கப்பட்டுள்ளதாகவும் முன்னணியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஆ.ரமேஸ்

# ஊரடங்கு சட்டம்: பஸ் போக்குவரத்து இன்மையால் மக்கள் அவதி

**இரத்தினபுரி நிருபர்**

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டு மீண்டும் 2.00 மணியளவில் அமுல்படுத்தப்படுகின்றமையால் பஸ் போக்குவரத்து இன்றி இரத்தினபுரி மாவட்டத்தில் தொழிலுக்கு செல்லும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அத்தியாவசிய தேவைகளுக்கு செல்வோர் பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் முறையான போக்குவரத்து இன்மையால் அரச நிறுவனங்களில் வரவு மிகவும் குறைவடைந்து காணப்பட்டதுடன் பாடசாலைகளிலும் மாணவர்களின் வரவும் வீழ்ச்சியடைந்தது காணப்பட்டது. அத்துடன் ஆசிரியர்களின் வரவும் மிகவும் குறைவாக காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

இரத்தினபுரி, மாவட்டத்தில் நேற்றைய தினம் கடமைகளுக்கு சென்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு சென்ற ஆசிரியர்கள், மாணவர்கள் பஸ் போக்குவரத்து இன்மையால் மிகவும் அவதியுற்றதை அவதானிக்க முடிந்தது.

தொடர்ந்து இவ்வாறு ஊரடங்கு உத்தரவு தொடருமாயின் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அத்தியாவசிய தேவைகளுக்கு செல்வோர் போக்குவரத்து இன்மையால் பல்வேறு சிக்கல்களை சந்திக்க நேரிடும்.

எனவே ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தி தளர்த்தப்படும் காலங்களில் கடமைகளுக்கு செல்லும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அத்தியாவசிய தேவைகளுக்கு செல்வோரின் நலன் கருதி முறையாக பஸ் போக்குவரத்து சேவைகளை அமுல்படுத்த வேண்டும். அல்லது வேறு மாற்று வழிமுறையை நடைமுறைபடுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# வன்முறை கலாச்சாரத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு தெரிவிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

சகல சமூகங்களும் அமைதியாக இருந்து, வெறுப்புப் பேச்சுக்களை தவிர்ந்துகொள்ளும்படியும், இனங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஒற்றுமையைப் பாதுகாக்கும் படியும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு தெரிவித்துள்ளது.

கண்டி டெவோன் ஹோட்டலில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் அங்கத்தவர் எஸ். ரிஸ்வான் மௌலவி இங்கு தெரிவிக்கையில்,

ஆர்ப்பாட்டம் செய்வோர், ஆர்ப்பாட்டத்தை மட்டுமே செய்யமுடியும். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது அவரவர் உரிமை.

ஆனால் அது வன்முறையாக மாறக்கூடாது. எப்போதும் வன்முறை கலாசாரத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற அனைத்து வன்முறைகளுக்கும் தமது அதிருப்பதியை தெரிவிப்பதுடன் அதனை வன்மையாகக் கண்டிக்கிறது.

இக்கட்டான இச்சந்தர்ப்பத்தில் அரசியல், இன, மத பிரதேச வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து, அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல்ரீதியாக எதிர்கட்சிகளும் தமது பங்களிப்பை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் அமைப்பாளர் காமினி ஜயவீர தெரிவிக்கையில்,

இலங்கையில் ஏற்பட்டு வரும் பிரச்சினைகளை சட்டவாக்கத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையே ஏற்பட்டுவரும் ஒரு முரண்பாடாகவே நாம் பார்க்கிறோம்.

இனவாதத்தை கையில் எடுக்கும் முயற்சிகளுக்கு சர்வமத அமைப்பு இடமளிக்காது. அவ்வாறு யாரும் இனச்சாயம் பூசி பிரச்சினையை மூடி மறைக்க முற்பட வேண்டாம். ஏனெனில் அண்மையில் நீர்கொழும்பில் அவ்வாறான ஒரு முயற்சி இடம் பெற்றதாக அறிய முடிகிறது. எனவே இனரீதியாக அதனை அணுக வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

தனிநபர் விருப்பு வெறுப்புக்களே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது. பொது மக்களின் ஆதிக்கம் அல்லது மேலாண்மையே மற்றெல்லா அதிகாரங்களையும் விட முதன்மை பெறவேண்டும்.

சகல சமூகங்களும் அமைதியாக இருக்குமாறும் வெறுப்புப் பேச்சுக்களை தவிர்ந்துகொள்ளும்படியும் அவர் கேட்டுக் கொண்டார்.

# அனகாட்மோர் தோட்டத்தில் மண்சரிவு அனர்த்தம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளிலுள்ள காட்மோர் தோட்ட கல்கந்த பிரிவில் நேற்று முன்தினம் முதல் பெய்த கனமழையால் பாரிய மண் மேடு சரிந்து வருகிறது. காட்மோர் தோட்ட கல்கந்த பிரிவில் இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது. அத்தோட்டம் தனியார் துறைக்கு சொந்தமானது.

இதனால் அப்பகுதியில் உள்ள குடியிருப்பு தாழ் இறங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அபாயம் காணப்படுகின்றது. பல வருடங்களுக்கு முன்னர் இங்கு தாழ் இறக்கங்கள் காணப்பட்டமையால் அங்கு குடியிருக்கும் மக்களை வேறுபகுதிகளில் குடியேற்ற நடவடிக்கை எடுத்து வந்த போதிலும் அவர்கள் அங்கு செல்லவில்லை என கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

# பொதுமக்கள் விழிப்புடன் எந்நேரமும் செயற்படவும்

## மல்வத்து மகா விகாரை பிரிவின் அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர்

**ஹாலிஎல விசேட நிருபர்**



முக்கியமான தருணத்தில் குறுகிய நோக்கங்களை நாடாமல் விழிப்புடன் செயற்படுமாறும் நாடு சரியான பாதையில் பயணிக்க வேண்டிய வேளையில் சில குழுக்கள் பல்வேறு நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதால் குழப்பமான சூழ்நிலை உருவாகும் என மல்வத்து மகா விகாரை பிரிவின் அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

மல்வத்து மகா விகாரையில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சமீபகாலமாக நாட்டில் சில மாற்றங்கள், இன்னல்கள், தொல்லைகள், இடையூறுகள் ஏற்பட்டாலும், நாடு கலங்காமல், பொறுமையுடன் வாழ்வது சிறப்பான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். சிலர் வேறு பாதையில் சென்று நாட்டை குழப்பலாம். அவ்வாறானதொன்றை தான் எதிர்பார்க்கவில்லை எனவும் தெரிவித்தார்.

சிங்கள, இந்து மற்றும் முஸ்லிம் மக்கள் நல்லிணக்கத்துடன் செயற்பட வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் அனுநாயக்க தேரர் தெரிவித்துள்ளார். இந்த காலத்திலும், எதிர்காலத்திலும் கருணையுடன் மற்றவர்களிடம் கருணை காட்ட வேண்டும் என்றும், மற்ற தரப்பினருக்கு எந்த தவறும் செய்யக்கூடாது.

மேலும் சிறப்பாக பணியாற்றுபவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை போக்க இன, கட்சி, மத பேதமின்றி அனைத்து குழுக்களும் ஒன்றிணைய வேண்டும் என மல்வத்து பிரிவின் அனுநாயக்க வண.திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் மேலும் வலியுறுத்தினார்.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## பயணம்

பயணத்தை துவக்கிவைத்த
சில நாளில்
ஒரு நிறுத்தத்தில்
அப்பா இறங்கிக் கொண்டார்
அது எங்களுக்குள்
பெரும் கொடையை விட்டுச்சென்ற
ஒரு மழை நாளாயிருந்தது

அம்மாவுக்கு பிள்ளைப்பாசம்
கூடவே இருந்துகொண்டாள்
நாங்கள் ஏறியிருந்த
நாள்வண்டி
24,48,72 என்று மிதவேகத்தில்
பல..365 மைல்கல்களை
பசிப் பிரதேசங்களின்
நெருக்குவார தெருக்களை
பல.. மலைத்தொடர்களை
கொண்டை ஊசி வளைவுகளைத்தாண்டி
ஓடிக்கொண்டிருந்தது.......,

பின்னொருநாள் அசதியில்
இனி என்னை எழுப்பவேண்டாமென
அம்மாவும்
நீள் துயில்கொண்டாள்
அக்கணமே
எனது பயணத்தை முடிவாக்க யோசித்தும்
முடியாமல் போனது
தனக்கும் ஏற்பட்ட பிள்ளைப்பாசம்

எனக்கான நாளையை
நிச்சயமற்றதாக்கி
இன்றை இழுத்துக்கொண்டு
ஒரு மலையுச்சியை தாண்டிய பள்ளத்தில்
ஓடிக்கொண்டிருக்கிறது
மீண்டும் நாள்வண்டி...

இதனால் என் பிள்ளைகளிடம்
சொல்லவருவது யாதெனில்;
நான் தூங்கினால் எழுப்ப வராதீர்கள்
பயணித்துக் கொண்டிருக்கிறேன்
நிரந்தரமாக!

**ரோஷான் ஏ.ஜிப்ரி**
வாங்காமம், இறக்காமம்.



## மரம் பேசுகிறேன்

உயிர்கள் உள்ளிழுக்கும் சுவாசக் காற்றை
ஒட்டு மொத்தமாய் உள்ளிழுக்கும்
ஓசோன் பாஷையில்
மரம் நான் பேசுகிறேன்.

அழுகின்ற என் வனங்களின் கழுத்தறுத்து
அடுக்குமாடிக் கட்டிக் குடியிருக்கும்
உங்கள் மனைகளில் சுழலும்
மின் விசிறியில் வெளிவருவது காற்றல்ல
அது எங்களின் உஷ்ண பெருமூச்சு.

விளை நிலங்களில் முளைவிடும்
வித்துக் குழந்தைகள் குடிக்கச் சுரக்கும்
மண் மாதாவின் மார்புக்கு பாலாய்
நீரோடைகள் பரிசளிக்க முடியா
நிலையில் நிற்குமெங்கள்
கண்ணீரைக் கண்டதுண்டா .

வனக் கூட்டுக் குடும்பம் சிதைத்து
வானுயர் கட்டிட சிற்பம் செதுக்கிய உங்கள்
கலைக் கண்ணோட்டத்தில் உங்களுக்கான
கொலை வலை பின்னியிருப்பதைச் சற்று
உற்றுப் பாருங்கள்

வன நாக்குகள் திறந்து
அருவிகளாய் சலசலத்தும்
நதிகளாய் வளைந்தும் நெளிந்தும்
பசுமையாய் பேசியிருந்தும் புரியாத
உங்களால் வரட்சி நாக்குகளால்
பேசத் தொடங்கிவிட்டது எங்கள் இனம்.

இன சுத்திகரிப்பு செய்யும் மானுடமே
சற்றேனும் இதய சுத்திகரிப்பு செய்ய
கற்றுக் கொள்ளா விட்டால்
இனியும் அழியும் எங்கள் இனம்பற்றி
பேசாத உங்களிடத்தில்
இன அழிப்பைப் பற்றி தீமொழியில்
பேசுமெங்கள் பேச்சைக் கேட்க
உங்களுக்கு காதுகள் மட்டுமல்ல
நீங்களே இருக்கபோவதில்லை,

**மெய்யன் நடராஜ்**



## வறுமையின் பிறந்த காலம் பொறுமை மறைந்த நேரம்

பத்திரமாக இருந்து
கொள்ளுங்கள் இது
பத்து ரூபாய்
இல்லாத காலம்.

பட்டனியாய் இருந்திட்டு
பக்குவமாய் போகும்
நேரம் இது
என்று வாய்யடைத்துப்
போய் உள்ளனர்
சிலர்.

சத்தமாய் பேசி
விடாதீர்கள் உங்கள்
குரல் வளை
நசிங்கிப் போய்
விடலாம் இங்கு.

வீதியில் இரங்கி
விடாதீர்கள் இருகால்களும்
துண்டிந்து விடப்படலாம்
இன்று.

தனிமையாக சென்றுவிடாதீர்கள்
சீர்குலைந்து போன
அரக்கன் எழுந்துள்ளான்
உறங்க வேண்டும்
என்பதற்காக களவு
செய்தே ஆகவேண்டும்
என்று.

சிரித்து விடாதீர்கள்
இனி வரும்
காலத்தில் அதுவாவது
மிஞ்சிடட்டும்.

மறந்து விடாதீர்கள்
இங்கு அனைத்தையும்
இழந்து போய்
வாழ்கிறோம் என்று.

**பொத்துவில் அஜ்மல்கான்...**

## மாற்றம்

மதம் இனம்
மொழி என
நாங்கள் நினைக்கவில்லை....

இன்று நிற்கின்றோம்
ஆர்ப்பாட்ட களத்தில்
ஒன்றாய் ஒற்றுமையாக
மனிதாபிமான சக
மனிதனாக....

சில முட்டாள்களின்
செயலால் இன்று
நாங்கள் கஷ்டங்களை
நினைத்தே வாழும்
வாழ்க்கையாகி
விட்டது...

பல ஏமாற்றங்கள்
சில போராட்டங்கள்
சின்ன சின்ன
இன்பத்தை கூட
தொலைத்து
நிற்கின்றோம்....

எங்கள் உழைப்பின்
வியர்வை துளி
மதிப்பில்லாதது
என நினைக்க
வேண்டாம்
அதை வீண்
அடித்தபின் வேதனை படுவீர்கள்....

நாங்கள் செய்யும்
இந்த ஆர்ப்பாட்டம்
சில ஆட்சியாளர்களுக்கு
புரியவும் இல்லை
புரியவைக்க முடியவும் இல்லை ....

இதே போல் என்று
அமையாது மாற்றங்கள் வாரும்
என காத்திருக்கின்றோம்
இன்று ஆர்ப்பாட்ட கலத்தில்...

**அருலானந்தம் பிரகாஷ் (கிசோ)...**



## கதைகளின் மரம்

திக்கித் திக்கி கதை பழகும் குழந்தையானது
முதலில் வாய் பார்த்து திரிகிறது

பின்னர் அவர்களிடமிருந்து உதிரும்
சிறியதும் பெரியதுமான சொற்களை
தீரா தாகமெடுத்தலைந்து திரியும்
ஒரு பறவையைப் போல்
ஒவ்வொன்றாக கிளிறிக் கிளறி
தானியமென பொறக்குகிறது

அதில் ஒழுக்கமான சொற்களெது
ஒழுக்கமற்ற சொற்களெதுவென்று
அதனால் இனம் காணவோ
உய்த்துணரவோ முடியவில்லை

நாளடைவில் சொற்கள்
துளிர்த்து சடைத்து
கதைகளின் மரமாகிறது குழந்தை

இதில் என்ன ஆச்சர்யமென்றால்
குழந்தை பாரதூரமான சொற்களை
உதிர்த்தும் போதுதான்
கதை பொறக்கித் திரிந்த செய்தியே
பெற்றோர்களுக்கு தெரிய வருகிறது

**ஜமீல்...**



## இறுதி மூச்சும் நீயே...!

இறுதி மூச்சும் நீயே...!
எழுதி வைத்தேன் இதயத்திலே
என்னில் பாதி நீயே...!
எங்குமே உன்னினைவு உயிரே
இது ஓர் அதிசயமே...!
எனக்குளே இன்னொரு
இதயம் வந்து துடிக்கிறதே...!
இது எப்படி சாத்தியமோ...!
இணைந்ததால் விளைந்த
இனிய இன்பத் தேனோ?
துணையாக என் தேசமதில்
தொடர்கிறாய் நிழல் போலே...
காற்றில் கலந்த
சுகந்தம் ஆனாய்
காலத்தீ பற்றி முடிந்தாலும்
முடிவில்லா காதல் தீயாய்
வருவேன் நானே!

**ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர்**

# சர்வதேச செய்திகள்

## வட கொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை




வட கொரியா, அதன் கிழக்குக் கரையோரத்திலிருந்து புவியீர்ப்பு ஏவுகணைகளை மீண்டும் சோதனை செய்துள்ளது.

ஜப்பான் கடலை நோக்கி வட கொரியா 3 ஏவுகணைகளைப் பாய்ச்சியதாகத் தென் கொரிய இராணுவம் தெரிவித்தது. அவை குறுந் தொலைவு ஏவுகணைகள் என்று கூறப்பட்டது.

அதில் ஒன்று, அதன் சிறப்புப் பொருளாதார வட்டாரத்திற்கு வெளியே விழுந்ததாக ஜப்பான் கரையோரக் காவற்படை தெரிவித்தது.

வட கொரியா இவ்வாண்டில் இதுவரை 10க்கும் மேற்பட்ட ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது.

வட கொரியா 2017 ஆம் ஆண்டு இடை நிறுத்திய அணு ஆயுத சோதனையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றிய சந்தேகங்களுக்கு மத்தியிலேயே இந்த புதிய ஏவுகணை சோதனை இடம்பெற்றுள்ளது. வட கொரியாவில் முதல் முறையாக கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டிருக்கும் நிலையில் அங்கு ஊரடங்கு பிரகடனப்படுத்தப்பட்டதன் மத்தியில், இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வடகொரியாவில் கொரோனா தொற்றால் ஒருவர் உயிரிழப்பு



வட கொரியாவில் கொரோனா தொற்றினால் குறைந்தது ஒருவர் உயிரிழந்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னதாக அங்கு வைரஸ் தொற்றால் சிலர் பாதிக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் மாத இறுதியிலிருந்து சுமார் 187,000க்கும் மேற்பட்டோர் அங்கு தனிமைப்பட்டிருப்பதாக அந்நாட்டின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ தெரிவித்தது.

அடையாளம் தெரியாத காய்ச்சலோடு இதுவரை 350,000க்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் 162,000க்கும் அதிகமானோருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் அந்த செய்தி நிறுவனம் கூறியது. இருப்பினும் அவர்கள் கொவிட்–19 தொற்றால் பாதிக்கப்பட்டவர்களா என்பதை அது குறிப்பிடவில்லை.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் 6 பேர் உயிரிழந்ததாகவும் அவர்களில் ஒருவர் ஓமிக்ரோன் கொரோனா திரிபினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. வைரஸ் தொற்றுக்கு எதிரான நிலையத்தைப் பார்வையிடச் சென்ற வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன் தேசிய அளவிலான முடக்கநிலையை அறிவித்துள்ளார்.

## போர்ட்டோ ரிக்கோவில் படகு கவிழ்ந்து பதினொருவர் பலி



போர்ட்டோ ரிக்கோவின் கடலோரப் பகுதியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் குறைந்தது 11 பேர் உயிரிழந்ததாக அமெரிக்கக் கடலோரக் காவற்படை கடந்த வியாழனன்று தெரிவித்தது.

படகில் இருந்த 31 பேர் காப்பாற்றப்பட்டதாகவும் அது டுவிட்டரில் குறிப்பிட்டது. அவர்களில் 11 பேர் பெண்கள், 20 பேர் ஆண்களாவர்.

உயிரிழந்த 11 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. டெசிசியோ தீவிலிருந்து வடக்கே 16 கிலோமீற்றர் தொலைவில் படகு கவிழ்ந்ததாக அமெரிக்கச் சுங்கத்துறை, எல்லைப் பாதுகாப்புப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

காப்பாற்றப்பட்டவர்களில் பெரும்பாலோர் ஹெயிட்டி அல்லது டோமினிக்கன் குடியரசைச் சேர்ந்தவர்கள் என்று அவர் குறிப்பிட்டார். கவிழ்ந்த படகு சட்டவிரோதப் பயணத்தில் ஈடுபட்டதாய்ச் சந்தேகிக்கப்பட்டதாக அமெரிக்கக் கடலோரக் காவற்படை முன்பு கூறியிருந்தது.

கடலில் உயிர்க்காப்புக் கவசம் அணியாத பலரையும் கவிழ்ந்த படகையும் ஹெலிகொப்டர் ஒன்று கண்டுபிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தேடல், மீட்புப் பணிகளுக்காகப் பல ஹெலிகொப்டர்கள் அனுப்பப்பட்டன.

## டுவிட்டரை வாங்கும் மஸ்க் திட்டத்தில் முட்டுக்கட்டை




டுவிட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் டொலருக்கு வாங்கும் ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக இலோன் மஸ்க் கூறியுள்ளார்.

டுவிட்டர் தளத்தில் உள்ள தேவையற்ற, பொய்க் கணக்குகளின் எண்ணிக்கை 5 வீதத்திற்கும் குறைவு என்ற தகவலுக்கு ஆதாரங்கள் இன்னும் அளிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

அந்தத் தகவலை டுவிட்டர் இம்மாத ஆரம்பத்தில் அறிவித்திருந்தது. ஆதாரங்கள் கொடுக்கப்படாததால் தான் ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ட்விட்டர் நிறுவனத்தை வாங்கிய பின், அதில் உள்ள தேவையற்ற கணக்குகளை நீக்குவது தமது முன்னுரிமைகளில் ஒன்று என மஸ்க் கூறியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக டுவிட்டர் நிறுவனம் உடனடியாக பதிலளிக்கவில்லை. எனினும் மஸ்கின் இந்த அறிவிப்பு காரணமாக பங்குச்சந்தையில் டுவிட்டர் நிறுவனத்தின் பங்குகள் கடுமையாகச் சரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பேரக் குழந்தை பெறாததால் மகனின் மீது தம்பதி வழக்கு



இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒரு தம்பதி, திருமணமாகி 6 ஆண்டுகள் ஆகியும் பேரக்குழந்தையைப் பெற்றெடுக்காததற்காக தங்களின் ஒரே மகன் மீதும் அவரின் மனைவி மீதும் வழக்கு தொடுத்துள்ளனர்.

சஞ்சீவ் பிரசாத், சாதனா பிரசாத் என்ற அந்தத் தம்பதி, தங்களின் மகனை வளர்ப்பதற்காகச் சேமித்து வைத்திருந்த எல்லாப் பணத்தையும் பயன்படுத்தியதாகக் கூறினர்.

ஓராண்டிற்குள் பேரக்குழந்தை பிறக்கவில்லை. எனவே சுமார் 650,000 டொலர் மதிப்பிலான இழப்பீடு கோருகின்றனர் அந்தத் தம்பதி.

அந்த வினோதமான வழக்கு ‘மன ரீதியான துன்புறுத்தல்’ என்னும் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது.

ஓய்வுபெறும் காலத்தில் பேரக் குழந்தையுடன் விளையாடலாம் என்ற நம்பிக்கையில் 2016ஆம் ஆண்டில் சுபாங்கி சின்ஹா என்னும் பெண்ணைத் தமது மகனுக்கு மணமுடித்து வைத்ததாக அந்தத் தம்பதி கூறினர்.

ஹரித்வார் நகரில் தாக்கல் செய்யப்பட்ட அந்தத் தம்பதியின் மனுவை மே 17ஆம் திகதி நீதிமன்றம் விசாரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 700 மில். ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாயில் நீர்



செவ்வாய்க்கோளின் மேற்பரப்பில் 700 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வரை தண்ணீர் இருந்ததாகத் தெரியவந்துள்ளது.

சீனாவின் சுரொங் விண்கலம் சேகரித்துள்ள மாதிரிகளில் அது கண்டுபிடிக்கப்பட்டதாகச் சீன விஞ்ஞானிகள் கூறினர்.

இதற்கு முன்னர், சுமார் 3 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புவரைதான் செவ்வாய்க்கோளின் மேற்பரப்பில் தண்ணீர் இருந்ததாக நம்பப்பட்டது. இந்நிலையில் இந்த புதிய கண்டுபிடிப்பு செவ்வாயில் முன்னர் நம்பப்பட்டதை விடவும் நீரின் இயக்கம் அதிகம் இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. தற்போது அதன் மேற்பரப்பில் தண்ணீர் இல்லை.

செவ்வாய்க்கோளை ஆராய்ந்துகொண்டிருக்கும் சுரொங் விண்கலம் கடந்த ஆண்டு மே மாதம் அங்கு சென்றடைந்தது. இதுவரை அந்த விண்கலம் செவ்வாய் மேற்பரப்பில் சுமார் 2,000 மீற்றர் உலாவி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

செவ்வாய்க்கோளின் நிலத்தடியில் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டால்தான், அங்கு உயிர் வாழும் சாத்தியத்தை நிர்ணயிக்க முடியும்; மனிதர்கள் அங்கு சென்று ஆராயவும் முடியும்.

## பால்வீதியில் இருக்கும் இராட்சத கருந்துளையின் படம் வெளியீடு



பால்வீதியின் நடுவே இருப்பதாக கூறப்படும் இராட்சத கருந்துளையை விண்வெளி வீரர்கள் படமெடுத்துள்ளனர்.

அவர்களின் பல்லாண்டு ஆய்வின் பலனாக அது சாத்தியமாகியுள்ளது. அந்தக் கருந்துளை ‘சகிட்டாரியஸ் ஏ ஸ்டார்’ என்று அழைக்கப்படுகிறது. இது சூரியனைவிட 4 மில்லியன் மடங்கு பெரியது.

கருந்துளை சாதாரணமாகக் கண்ணுக்குத் தெரியாது. ஆனால் துளையைச் சுற்றிப் பளிச்சென்று மிளிரும் அதிகமான வெப்பவாயுக்களின் உதவியோடு கருந்துளையின் நிழலை அடையாளங்காண முடியும்.

ஒரு இருண்ட மையத்தைச் சுற்றி சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிறங்களின் தெளிவற்ற ஒளிரும் வடிவத்தை இந்தப் புகைப்படம் காட்டுகிறது.

நிகழ்வெல்லை என்னும் 8 தொலைநோக்கிகள் அடங்கிய உலகளாவிய கட்டமைப்பை உருவாக்கிக் கருந்துளையை விண்வெளி வீரர்கள் படமெடுத்தனர்.


இந்த முயற்சியில் 80 அமைப்புகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் பங்கெடுத்துள்ளனர்.

இதுபோன்று சில ஆண்டுகளுக்கு முன்னர் கருந்துளைகளின் புகைப்படங்களை பிடிக்க விஞ்ஞானிகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அந்த கருந்துளை ஒரு இடத்தில் நிலையாக இல்லாமல் உள்ளது. இதனால் அவர்களால் படத்தை தெளிவாக பிடிக்க முடியாமல் தோல்வியடைந்தனர்.

மேலும் இது கருந்துளையின் முதல் புகைப்படமல்ல. முன்னதாக, இதே குழு 2019இல் 53 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஒரு விண்மீன் மண்டலத்திலிருந்து கருந்துளையின் படத்தை வெளியிட்டது.

நட்சத்திரங்கள் இறக்கும்போது கருந்துளைகள் உருவாகின்றன. இதன் ஈர்ப்பு விசை மிக அதிகமாகும். ஒளி உட்பட எதுவும் கருந்துளையில் இருந்து தப்ப முடியாது.

## அமெரிக்காவில் குழந்தை பால் மாவுக்கு தட்டுப்பாடு



அமெரிக்காவில் குழந்தைப் பால் மாவுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் குழந்தைப் பால் மாவின் இருப்பில் சராசரியாக 43 வீதம் குறைவாக இருந்தது என டேடாசம்பிலி கூறியது.

பற்றாக்குறையைச் சமாளிக்கப் பால் மாவை இறக்குமதி செய்வது குறித்து ஆலோசித்து வருவதாக ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் தெரிவித்தது.

அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் குழந்தைப் பால் மாவில் 98 வீதம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுபவை.

வசதி குறைந்த குடும்பங்கள் அரசாங்கச் சலுகையில் பால் மாவை வாங்கும் செயல்முறையை எளிமைப்படுத்துவது தொடர்பில் மாநிலங்களுடன் செயல்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் கூறினர்.

பால் மாவை இணையத்தில் அதிக விலைக்கு விற்பவர்களைக் கண்காணிக்குமாறும் பைடன் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும், நிலைமை எப்போது சீராகும் எனக் கூற அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

குழந்தை பிறந்த முதல் 6 மாதங்களுக்குத் தாய்ப் பால் மட்டும் கொடுக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் தாய்ப் பால் கொடுப்பது தாயின் மருத்துவ நிலையையும் சூழலையும் பொறுத்துள்ளது.

## ஸ்பெயின்: மாதவிடாயில் பெண்களுக்கு விடுமுறை



ஸ்பெயின் நாட்டில் பெண்கள் நலனில் அக்கறை கொண்டு, பெண்கள் தங்கள் மாதவிடாய் நாட்களில் விடுமுறை எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் வசிக்கும் பெண்கள், தங்கள் மாதவிடாயின் போது மாதத்தில் 3 நாட்களுக்கு விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என்ற சிறந்த அறிவிப்பினை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

பெண்களின் மாதவிடாய் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான பிற நடவடிக்கைகளை உள்ளடக்கிய இந்த சீர்திருத்தம், வரும் செவ்வாய் கிழமை அன்று நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என தெரிகிறது.

மேலும், அங்கு சமூகத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு, சானிட்டரி நாப்கின் பேட்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் பாடசாலைகளில் தேவைப்படும் பெண்களுக்கு சானிட்டரி பேடுகள் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டு பெண்களின் நீண்டகால கோரிக்கையான, சானிட்டரி பேட்கள் மற்றும் டம்பன்களின் விற்பனை விலையில் இருந்து வட் வரியை நீக்க வேண்டும் என்பதும் நிறைவேற்றப்பட வாய்ப்புள்ளது.

இந்த முடிவை இதுவரை எந்த ஐரோப்பிய நாடுகளும் எடுத்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# கால்பந்து சம்பியன்ஷ் லீக், தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர்கள் ஒத்திவைப்பு

சம்பியன்ஷ் லீக் கால்பந்து தொடர் மற்றும் தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப்பின் சுபர் லீக் போட்டிகள் திகதிகள் அறிவிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் மற்றும் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் நாலக்க ஆகியோர் தெரிவித்தனர். மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் 14 அணிகள் மோதும் சம்பியன்ஷ் லீக் தொடர் எதிர்வரும் 13ம் திகதி ஆரம்பமாகவிருந்தது.

எனினும், தொடர் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் குறிப்பிட்ட ஜஸ்வர் உமர், "நாம் குறைந்தது இம்மாத இறுதியிலாவது சம்பியன்ஷ் லீக்கை ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம். வெற்றிகரமான தொடராக அமைய அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய சூழ்நிலை விரைவில் சரியாகும் என நம்புகிறேன்" என்றார்.

மன்சி தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் கடந்த 9ம் திகதி நடைபெறவிருந்த போதும், நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு தொடர் ஒத்திவைக்கப்பட்டது. இதுதொடர்பில் குறிப்பிட்ட நாலக்க, "நாம் தொடரை ஆரம்பித்தோம். எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையால் தொடரை ஒத்திவைத்துள்ளோம். அதேநேரம், விரைவில் நிர்வாகக் குழு சந்திப்பை மேற்கொண்டு, நாட்டின் சூழ்நிலையை அறிந்து எதிர்கால திகதிகளை அறிவிப்போம்" என்றார்.



# மேற்கிந்திய சுற்றுப் பயணத்திலிருந்து விலகும் ரங்கன ஹேரத்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளர் ரங்கன ஹேரத் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தில் பங்கேற்கமாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடயத்தினை ரங்கன ஹேரத் கடந்த 12 Cricbuzz இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வியில் உறுதிப்படுத்தியுள்ளார். இதில் தனது குடும்பத்துடன் சிறிது காலத்தை செலவிடுவதற்கு விடுமுறை வழங்குமாறு கேட்டு அந்நாட்டு கிரிக்கெட் சபைக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரங்கன ஹேரத்தின் இந்தக் கோரிக்கை தொடர்பில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் இயக்குனர் காலித் மஹ்முத் கருத்து வெளியிடுகையில்,

ரங்கன ஹேரத் தனது குடும்பத்துடன் சில காலம் கழிக்க அனுமதி கோரியிருந்தார். எனவே, அவர் மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தில் பங்கேற்க மாட்டார் என்று அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் தற்போது அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை காணப்பட்டாலும், இலங்கைக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்களாதேஷ் அணியுடன் ரங்கன ஹேரத் தொடர்ந்து பணியாற்றுவார் என அந்நாட்டு கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

சிம்பாப்வே சுற்றுப்பயணத்தின் போது ரங்கன ஹேரத் பங்களாதேஷ் அணியின் சுழல்பந்து வீச்சுப் பயிற்சியாளராக இணைந்து கொண்டார், பின்னர் அவரது ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி 20 உலகக் கிண்ணம் வரை நீடிக்கப்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தில் ரங்கன ஹேரத்துக்குப் பதிலாக யார் சுழல்பந்து வீச்சுப் பயிற்சியாளராக இணைந்து கொள்வார் என்ற விடயத்தை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இன்னும் முடிவு செய்யவில்லை. எனினும், பங்களாதேஷ் அணியின் முன்னணி சுழல்பந்து வீச்சுப் பயிற்சியாளர் சொஹல் இஸ்லாம் பதில் பயிற்சியாளராக நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கிந்திய தீவுகள் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான தொடரில் இரண்டு டெஸ்ட் போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று ரி 20 போட்டிகள் உள்ளடங்கும். பங்களாதேஷ் அணி எதிர்வரும், ஜூன் 6 ஆம் திகதி மேற்கிந்திய தீவுகள் நோக்கி புறப்பட உள்ளது. இதில் முதல் டெஸ்ட் போட்டி ஜூன் 16 முதல் 20 வரை அன்டிகுவாவிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி செயின்ட் லூசியாவில் ஜூன் 24 முதல் 28 வரையிலும் நடைபெறவுள்ளது. இதனைத்தொடர்ந்து முதலிரெண்டு ரி 20 போட்டிகள் முறையே ஜூலை 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் டொமினிகாவிலும், மூன்றாவது ரி 20 போட்டி ஜூலை 7 ஆம் திகதி கயானாவிலும் நடைபெறவுள்ளது. இறுதியாக, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஜூலை 10, 13 மற்றும் 16 ஆகிய திகதிகளில் கயானாவில் நடைபெற உள்ளன.



# அக்கரைப்பற்று கல்வி வலய எல்லே சுற்றுப் போட்டியில் ஆறு அணிகள்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலய எல்லே சுற்றுப் போட்டியில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த மொத்தம் ஆறு மாணவர் அணிகள் பங்குபற்றியதாக அக்கரைப்பற்று கல்வி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஜெமீல் தெரிவித்தார். அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் (நழீமி) யின் ஆலோசனை, வழிகாட்டலில், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக விளையாட்டுப் பிரிவு இச்சுற்றுப் போட்டியை வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது.

அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்திலிருந்து, அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயம், முகம்மதியாபுரம் பாயிஷா மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்திலிருந்து பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம், ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயம், பொத்துவில் கல்விக் கோட்டத்திலிருந்து பொத்துவில் மத்திய கல்லூரி, பொத்துவில் அல்கலாம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர் அணிகள் எல்லே சுற்றுப் போட்டியில் பங்கேற்றன பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம், ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயம் ஆகிய மாணவர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலய மாணவர் அணியினர் 5:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிசூடினர். ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய மாணவர் அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றி அணியினர் மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

# கரவெட்டி வலைப்பந்தாட்டத்தில் நவஜீவன்ஸ் அணி சம்பியன்



(யாழ். விளையாட்டு நிருபர்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியன் ஆனது.

அண்மையில் வதிரி டைமன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற. இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சிவகுமரன் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதனால் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்று சமபலத்துடன் மோதினர். இருப்பினும் ஆட்ட நேர முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 14:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

# வட கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான கராத்தே சுற்றுப்போட்டி இடைநிறுத்தம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

வட மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க கராத்தே போட்டி கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் மெக்கெய்சர் உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இந்த போட்டியை ஸ்ரீ லங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகாணம் அதன் தலைவர் ஏ.ஆர். இக்பால் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த போட்டியில் 90 வீதமான போட்டி நிகழ்ச்சிகள் நிறைவடைந்த நிலையில் நாட்டில் திடீரென அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு நிலைமையால் ஏனைய போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும் பிற்போடப்பட்டுள்ளன.

# இலங்கை செக்வோல் தேசிய அணிக்கு சபீர் அலி தெரிவு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



இலங்கை செக்வோல் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 2022ஆம் ஆண்டின் செக்வோல் தேசிய அணிக்கு 11 வீரர்களை இணைத்து கொள்வதற்கு நடாத்தப்பட்ட பரீட்சையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த எம்.எச். சபீர் அலி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) விளையாட்டு பயிற்றுவிப்பாளராக கடமையாற்றும் இவர், இவ்வணியில் இணைந்து கொள்வதற்கு நடைபெற்ற அனைத்து பலப்பரீட்சைகளிலும் சிறந்த புள்ளிகளை பெற்று ஆசிய பசுபிக் சம்பியன் தரப்படுத்தலில் ஆறாம் இடத்தை பிடித்து இலங்கையின் தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# கிளி.முக்கொம்பன் ம.வி மூன்று பிரிவுகளில் சம்பியன்







(யாழ்.விளையாட்டு நிருபர்)

கிளிநொச்சி பூநகரி கோட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளில் 16, 18, 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டிகளில் கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலய அணி சம்பியனானது. பூநகரி மத்திய கல்லூரியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம் பெற்ற 16 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி ஞானிமடம் அ.த.க.பாடசாலை அணி மோதியது.

இதில் கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலய அணி 8:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலய அணியை எதிர்த்து குமுழமுனை அ.த.க. பாடசாலை அணிமோதியது. இதில் கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலய அணி 8:7 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றவதக இடம் பெற்ற 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலய அணியை எதிர்த்து, பூநகரி சிறிவிக்கினேஸ்வரா வித்தியாலயம் அணி மோதவிருத்தது. இதில் பூநகரி சிறிவிக்கினேஸ்வரா வித்தியாலயம் அணி இறுதியாட்டத்திற்கு சமூகம் தராததினால் கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலய அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 14ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.